விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிரவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 24
ஒலி 202 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 24 ஞாயிற்றுக்கிழமை (09.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# சரத் வீரசேகரவின் கருத்து

# நீதித்துறைக்கு அச்சுறுத்தல்

## தமிழ்த் தலைவர்கள் கண்டனம்



(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவின் கருத்து நீதித் துறைக்கு அச்சுறுத்தலானது. சரத் வீரசேகர வெளியிட்டுள்ள கருத்தை வன்மையாகக் கண்டிப்பதாக தமிழ்க் கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## சமூக வலைதளங்களில் வீடியோ

### பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

சமூக ஊடகங்களில்வீடியோ பதிவிடும்போது அவதானம் தேவை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ இதனை தெரிவித்தார்.

"பெண்களை தாக் 19

## இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்தத் திட்டம்

(கொழும்பு)

இறக்குமதிப் பொருட்களின் கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்த திட்டமிடப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு அளித்த 19

## பொருளாதார பேரழிவு குறித்து எச்சரித்தும் கோட்டா கேட்கவில்லை

### மத்திய வங்கி ஆளுநர் நந்தலால்



(கொழும்பு)

இலங்கை முகங்கொடுக்கவிருக்கும் "பொருளாதாரப் பேரழிவு" குறித்து தான் முன் கூட்டியே எச்சரித்ததாகவும், இருப்பினும் அப்போதைய மத்திய வங்கியின் மேலிடமோ அல்லது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமோ அதற்கு செவிசாய்க்கவில்லை என்றும் இலங்கை 19

## மீசாலையில் விபத்து; குடும்பஸ்தர் மரணம்



(சாவகச்சேரி)

மீசாலைச் சந்தி ஏ9 வீதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த பத்மநாதன் கதிர்வேல் (வயது-66) என்ப 19

## ஆட்டோ மோதியதில் பெண் ஒருவர் உயிரிழப்பு

### புலோலியில் சம்பவம்

(கரணவாய்)

முச்சக்கரவண்டி மோதியதில் படுகாயங்களுக்கு உள்ளான பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் புலோலி, மேற்கைச் சேர்ந்த சிவக்கொழுந்து வல்லிபுரம் (வயது-75) என்பவரே உயிரிழந்தவாராவார்.

கடந்த புதன்கிழமை மாலை புலோலி விறுமர் ஆலயத்துக்குச் சென்ற 19

## இலங்கைக்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கத் தயார்

### இலங்கைக்கான பிரதி இந்திய உயர்ஸ்தானிகர்



(கொழும்பு)

இலங்கைக்கான கடன் வழங்குநர்களுடனான் நடவடிக்கைகளின்போது ஜப்பான் மற்றும் பாரிஸ் கிளப் நாடுகளுடன் இணைந்து இலங்கைக்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்குவதாக இந்தியா அறிவித்துள்ளது.

கொழும்பில் இடம் 19

## இனப் பிரச்சினை தொடர்பில் பாரதப் பிரதமருக்கு கடிதம்

### பங்காளிகளுடன் இணைந்து அனுப்பப்படும் – மாவை



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுடைய இனப் பிரச்சினை மற்றும் 13ஆம் திருத்தச் சட்டம் தொர்டர்பான நிலைமைகள் தொடர்பில் உள்ளடக்கிய ஆவணத்தை பங்காளி கட்சிகளுடன் இணைந்து இந்தியப் பிரதமர் மோடிக்கு அனுப்புவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என தமிழரசுக் கட்சி 04

## உறவுகளின் போராட்டத்தில் நெகிழ்ச்சியான சம்பவம்



19

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
18 - 07 - 1949



இறப்பு
08 - 07 - 2015

## அமரர் கதிரவேலு சந்திரலிங்கம்

(ஓய்வுநிலை மேற்பார்வையாளர்
அச்சுவேலி பனை, தென்னை அ.கூ.சங்கம்)

திதி: அபரபக்க ஸப்தமி

எட்டாண்டுகள் ஓடி மறைந்தது
ஏழேழு ஜென்மம் எடுத்தாலும்
உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சங்களை விட்டகலாது
அன்பின் உயிராய்
எம் நெஞ்சங்களில் என்றும்
நீங்கள் நிலைத்து வாழ்வீர்கள் (16229)

கட்டைப்பிராய், யாழ்ப்பாணம். குடும்பத்தினர்


## வேலைக்கு ஆள் தேவை

பண்ணை வேலைக்கு ஆள் தேவை.
சம்பளமாக சுமார் 55,000/=
வீடு கொண்டு செல்ல கூடியதாகவும்
EPF and ETF முழுவதும்
எம்மால் கட்டப்படுவதுடன் உணவும்
எம்மால் வழங்கப்படும்.
( தங்கி நின்று வேலை செய்வதுடன்
மாத விடுமுறையில்
வீடு சென்று வரலாம் ) (16237)

077 820 9424

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள
எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு
அனுபவமுள்ள மேசன், கூலியாள்,
பெயின்ரர் தேவை. (16236)

076 586 4967
075 944 8104
076 760 0403


## கம்பியால் தாக்கப்பட்ட சிறுவன் மரணம்

விளையாடிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் சிறுமி ஒருவரால் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்ட சிறுவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளான்.

நீர்கொழும்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்களான இரண்டு சிறார்களும் விளையாடிக் கொண்டிந்த சந்தர்ப்பத்தில் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

இச்சம்பவம் கடந்த 4 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. காயமடைந்த குறித்த சிறுவன் நீர்கொழும்பு வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். (ம-7)


## கனடா சுற்றுலா விசா

சுற்றுலா விசா மூலம் கனடாவிற்கு மிக குறுகிய காலத்தில் குறைந்த செலவில் செல்வதற்கு எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்
சட்டரீதியாக கனடாவில் குடியேறுவதற்கான வாய்ப்பினை நாங்கள் உங்களிற்கு பெற்றுத்தருகிறோம்.

**Hybrid International hub (Pvt) Ltd, Jaffna**

021 222 1265
076 250 0098 (C-6884)

## சொர்க்கம் திருமண சேவை

கனடாவில் வசிக்கும் 35 வயது மற்றும் 29 வயதுடைய மணமகன்களுக்கு (ஆங்கிலம் தெரிந்த) மணமகள்களை இலங்கையில் எதிர்பார்க்கின்றோம்.

UK இல் வசிக்கும் 38 வயது மற்றும் 38 வயதுடைய மணமகன்களுக்கு தகுந்த மணமகள்களை இலங்கையில் எதிர்பார்க்கின்றோம்.

இலங்கையில் வசிக்கும் 31 வயதுடைய (R.C) மணமகளுக்கு தகுந்த மணமகனை இலங்கையில் எதிர்பார்க்கின்றோம்.

0014 1666 1855 (கனடா) (16234)
077 200 0230,077 887 6969 (யாழ்ப்பாணம்)


# மரண அறிவித்தல்

## திரு. தம்பு கந்தசாமி



பிறப்பு : 06.01.1938 இறப்பு : 06.07.2023

யாழ் பண்டத்தரிப்பு பிரான்பற்றை பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும் கொண்ட தம்பு கந்தசாமி அவர்கள் 06.07.2023 வியாழக்கிழமை அன்று அன்னாரது இல்லத்தில் காலமானார்.


அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பு - பொன்னு தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் மருமகனும், காசிப்பிள்ளையின் ஆருயிர் கணவரும், நவரத்தினம், துரைராசா, பூமணி, சரஸ்வதிதேவி, பரமேஸ்வரி ஆகியோரின் உடன்பிறந்த சகோதரனும், மனோன்மணி, லட்சுமி, மகேஸ்வரி, கமலாதேவி, நடராசா அவர்களின் அன்பு மைத்துனரும், பாக்கியநாதன் (டென்மார்க்), தேவராணி (ஸ்ரீலங்கா), லோகநாதன் (டென்மார்க்), விக்னேஸ்வரன் (லிங்கம் சுவிஸ்) ஜெயராணி (நோர்வே), தங்கேஸ்வரன் (வரன் கனடா), புஸ்பராணி (ஸ்ரீலங்கா), பிரதீப் (பிரபு ஸ்ரீலங்கா), ஜீவிதா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமான தந்தையும், சற்குணதேவி (டென்மார்க்), அன்பழகன் (ஸ்ரீலங்கா), கலாராணி(டென்மார்க்), காலஞ்சென்ற விஜிதா(சித்திரா) மற்றும் பரமேஸ்வரி (சுவிஸ்), சற்குணானந்தன் (நோர்வே), கவினா(கனடா), ஸ்ரீகாந்தன்(ஸ்ரீலங்கா), இந்திரா(ஸ்ரீலங்கா), தவனேசன்( பிரான்ஸ்) ஆகியோரின் அன்புக்குரிய மாமனாரும், ரேணு, ரேணி, திவா, கேதீஸ்வரன், கனிஸ்டலா, சாரங்கன், அபிஷாத், ஜஸ்மி, ஜனுஷி, ஹரிஷ், விதுசன், லக்சன், லதுசன், ஸ்வரன், சஞ்ஜய், சபிதா, லதுஷிகா, லகீஷ், லனிஷா, லோஜன், பவிஷா, லதுஷன், அக்சனா, கிதுர்சன், தனிஷா, தனேஷ், ஆகியோரின் பாசமிகு பேரனும், யஷ்வின், அக்சிதா, அக்சாத் ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 10.07.2023 திங்கட்கிழமை மு.ப 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பின்னர் பிரான்பற்று விளாவெளி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
பாக்கி மகன் (டென்மார்க்) : 004527822214
லோகன் மகன் (டென்மார்க்) : 004527636301
லிங்கம் மகன் (சுவிஸ்) : 0041784057326
வரன் மகன் (கனடா) : 001 6479716804
பிரபு மகன் : 0776756150
பாமா மகள் (நோர்வே) : 4793628861
ஜீவிதா மகள் (பிரான்ஸ்) : 33783608760
உமா மகள் (ஸ்ரீலங்கா) : 0775189641

(16225) தகவல்:- குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## திரு. அழகேஸ்வரசாமி ஸ்ரீகரன்

( ஓய்வு பெற்ற வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் )

அல்வாய் கிழக்கு, வட்டுவத்தையை பிறப்பிடமாகவும் கரவெட்டி மத்தொணியை வசிப்பிடமாகவும் கொண்ட அழகேஸ்வரசாமி ஸ்ரீகரன் நேற்று 08.07.2023 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அழகேஸ்வரசாமி - தங்கம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும் லோகேஸ்வரியின் அன்பு கணவரும் சுதாகரன், சுதர்சன், சுபாஜினி, சுஜீவன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 09.07.2023 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 02.00 மணியளவில் கரவெட்டி சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மத்தொணி 077 618 1414
கரவெட்டி மேற்கு 077 659 9577
[illegible] 077 732 2720 (C-6885)

தகவல்:- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு சலுகைகள் வழங்க வேண்டும்

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

அரச மற்றும் வர்த்தக வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு சலுகைகளை வழங்க வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம் பலாபிட்டிய அறிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கொள்கை வட்டி வீதங்களின் குறைப்புக்கு ஏற்ப வட்டி வீதங்கள் குறைக்கப்படுவதால், அரச மற்றும் வர்த்தக வங்கிகள் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு சலுகைகளை வழங்க வேண்டும்.

அதனை ஒழுங்குபடுத்தும் நேரடி பொறுப்பு மத்திய வங்கிக்கு உண்டு.

அரச மற்றும் வர்த்தக வங்கிகள் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு சலுகைகளை வழங்க வில்லை என்றால் வங்கி முறையின் சிறப்பு நேரடி ஒழுங்கு முறையை செயற்படுத்த தயாராக இருப்பதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியின் இந்த முடிவை எந்தவித சந்தேகமும் இன்றி செயற்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுத்தமைக்காக மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் அதன் அதிகாரிகளுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (4)

# பொலிஸ்மா அதிபர் விக்கிரமரத்னவுக்கு மூன்று மாத கால சேவை நீடிப்பு

(கொழும்பு)

**பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவுக்கு 3 மாத காலத்திற்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக தகவல்கள் தெரிவிக்கின்றன.**

அதன்படி, விக்ரமரத்ன இன்று அல்லது நாளை பணிக்கு சமுகமளிக்க உள்ளதாக பொலிஸ் தலைமையகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கொழும்பு ஊடகம் ஒன்றிடம் தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபராக இருந்த விக்ரமரத்ன கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி ஓய்வு பெறவிருந்த நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மூன்று மாத காலத்திற்கு அவரின் சேவையை நீடித்தார். இந்த சேவை நீடிப்பு கடந்த மாதம் ஜூன் 25 ஆம் திகதியுடன் முடிவடைந்தது.

பொலிஸ்மா அதிபர் ஒருவர் ஓய்வு பெறும் போது அவருக்கு பொலிஸ் அணிவகுப்பு நடத்தப்படுவதாகவும் ஆனால் சேவை நீடிப்பு நாளில் அவருக்கான அணிவகுப்பு இடம்பெறவில்லை எனவும் பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

விக்ரமரத்ன 2020 இல்



பொலிஸ்மா அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (4)

# உ/த பரீட்சைக்கு ஒன்லைன் விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் இணையம் ஊடாக எதிர்வரும் 28 வரை ஏற்றுக் கொள்ளப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விண்ணப்பதாரர்கள் திணைக்களத்தின் www.doenets.lk மற்றும் www.onlineexams.gov.lk/eic அல்லது மொபைல் செயலியான 'DoE' மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் முன் விண்ணப்பதாரர்கள் வழிமுறைகளை சரியாகப் படிக்க வேண்டும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலை மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களை அந்தந்த அதிபர் மூலமாக சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பின்னர், குறித்த அச்சிடப்பட்ட நகலை தங்களிடம் வைத்திருக்க வேண்டும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது. (4)

# இறைச்சி முட்டை விலை இரு மாதங்களில் குறையும்



(கொழும்பு)

முட்டை விலையும் கோழி இறைச்சி விலையும் குறையும் என்று கால்நடை மேம்பாட்டுத் துறை இராஜாங்க அமைச்சர் டி.பி. ஹேரத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, அடுத்த 2 மாதங்களுக்குள் இந்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அவர் அண்மைக் காலமாக டொலருக்கு எதிராக ரூபாவின் பெறுமதியில் கணிசமான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து பல பொருட்களின் விலைகள் குறைக்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

இருப்பினும் சந்தையில் எந்தவொரு பொருட்களின்விலையும் இதுவரை குறைவடையவில்லை என்றும் பழைய விலையிலேயே பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாகவும் மக்கள் குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# ஒரு கோடி பெறுமதியான ஐஸுடன் இருவர் கைது

(கொழும்பு)

ஒரு கோடி ரூபா பெறுமதியான ஐஸ் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த சந்தேகத்தின் பேரில் சகோதரர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கம்பஹா தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, உடுகம் பொல, நெதகமுவ பிரதேசத்தில் வைத்து 22 மற்றும் 28 வயது டைய சகோதரர்கள் இருவரே கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, கொட்டுகொட பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரே வெளிநாட்டில் இருந்து இந்த போதைப் பொருட்களைக் கொண்டு வந்து விநியோகித்தமை தெரியவந்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (4)

# மின்சக்தி எரிசக்தி துறைக்கு 220 மில்லியன் டொலர்

## அமைச்சர் காஞ்சன

(கொழும்பு)

இலங்கையில் முன்னெடுக்கப்படவுள்ள மின்சக்தி மற்றும் எரிசக்தி அபிவிருத்தித் திட்டங்களுக்கு 220 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி வழங்க ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி AIIB இணக்கம் தெரிவித்துள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் இலங்கையின் அபிவிருத்தி திட்டங்களுக்கு உதவ AIIB இணக்கம் தெரிவித்ததாக மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கை மின்சார சபை மற்றும் இந்தியாவில் தேசிய அனல் மின்சாரக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் கூட்டுத் திட்டமான 130 ஆறு சம்பூர் கிரவுண்ட் மவுண்ட் சோலார் பவர் பார்க் அபிவிருத்தி தொடர்பில் இச்சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 50 மெகாவாட் மின் உற்பத்தி நிலையத்தின் முதல் கட்டத்திற்கான எரிசக்தி அனுமதி அடுத்த வாரம் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அதேநேரத்தில் டிரான்ஸ்மிஷன் லைன்கள் மற்றும் அதன் திட்ட வளர்ச்சிக்கு தேவையான நிதியை திரட்ட AIIB உடன் பேச்சுவார்த்தைகள் நடந்து வருவதாகவும் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# இலங்கை வருகிறார் இந்திய வெளிவிவகார செயலாளர்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய பயணத்திற்கான ஏற்பாடுகளை செய்வதற்காக, இந்திய வெளிவிவகார செயலாளர் வினய் மோகன் குவத்ரா அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. ரணில் விக்கிரமசிங்க கடந்த வருடம் ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பின்னர் முதல் தடவையாக இந்தியாவிற்கு பயணம் செய்யவுள்ளார்.

மேலும் எதிர்வரும் 20 ஆம் திகதி அமைச்சர்களான, அலி சப்ரி, டக்ளஸ் தேவானந்தா, ஜீவன் தொண்டமான் மற்றும்



காஞ்சன விஜேசேகர ஆகியோருடன் இந்த விஜயம் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இந்த விஜயத்தின் போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன், ரணில் விக்கிரமசிங்க முக்கியத்துவமிக்க இருதரப்பு பேச்சுக்களை நடத்தவுள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக கிண்ண தகுதிச்சுற்று தொடர் வெற்றியில் இலங்கை



உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான தகுதி சுற்று ஜிம்பாப்வேயில் நடந்து வருகிறது. இதில் ஹராரே நகரில் நேற்று முன்தினம் நடந்த சுப்பர் சிக்ஸ் சுற்றின் கடைசி லீக் ஆட்டத்தில் முன்னாள் சம்பியன்கள் இலங்கை-வெஸ்ட் இண்டீஸ் அணிகள் சந்தித்தன. "டாஸ்" ஜெயித்த இலங்கை கப்டன் ஷனகா முதலில் பந்து வீசுவதாக அறிவித்தார்.

இதன்படி முதலில் பட்டிங்கை தொடங்கிய வெஸ்ட் இண்டீஸ் அணி தீக்ஷனா, புதுமுகம் துஷன் ஹேமந்தா ஆகியோரின் சுழற்பந்து வீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறியது. 123 ரன்னுக்குள் 7 விக்கெட்டுகளை இழந்து பரிதவித்த வெஸ்ட் இண்டீசுக்கு கேசி கர்டி கைகொடுத்தார். 8 ரன்னில் கேட்ச் கண்டத்தில் இருந்து தப்பித்த கேசி கர்டி அந்தப் வாய்ப்பை சரியாக பயன்படுத்தி அணியை சரிவில் இருந்து மீட்டெடுத்தார். ஷெப்பர்டு (26 ரன்), கெவின் சின்கிளேர் (25 ரன்) ஆகியோரின் ஒத்துழைப்போடு ஸ்கோரை கௌரவமான நிலைக்கு நகர்த்திய கேசி கர்டி (87 ரன், 96 பந்து, 6 பவுண்டரி, ஒரு சிக்சர்) கடைசி விக்கெட்டாக கேட்ச் ஆனார். வெஸ்ட் இண்டீஸ் அணி 48.1 ஓவர்களில் 243 ரன்களுக்கு ஓல்அவுட் ஆனது. இலங்கை தரப்பில் தீக்ஷனா 4 விக்கெட்டும் ஹேமந்தா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

அடுத்து களம் இறங்கிய இலங்கை அணியில் பதும் நிசாங்காவும் கருணா ரத்னேவும் முதல் விக்கெட்டுக்கு 190 ரன்கள் சேர்த்து வெற்றி வாய்ப்பை எளிதாக்கினர். தனது 3 ஆவது சதத்தை எட்டிய நிசாங்கா 104 ரன்களில் கேட்ச் ஆனார். கருணாரத்னே தனது பங்குக்கு 83 ரன்கள் எடுத்தார். இலங்கை அணி 44.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 244 ரன்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்தத் தொடரில் தோல் வியே சந்திக்காத இலங்கை அணி சுப்பர் சிக்ஸ் சுற்றில் பெற்ற 3 ஆவது வெற்றி இதுவாகும். உலகக் கிண்ண வாய்ப்பை முன்பே உறுதி செய்து விட்ட இலங்கை அணி இன்று நடக்கும் இறுதி ஆட்டத்தில் நெதர்லாந்தை எதிர்கொள்கிறது. (4)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நவக்கிரி பகுதியில் 24 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- நவக்கிரி மாணிக்க பிள்ளையார் கோயில் வீதியில்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- 3 வருடங்கள் பூர்த்தி அடைந்த தென்னைகள் உள்ளன.
- நிலாவரை வற்றாக்கிணற்றில் இருந்து 1 km தூரம்
- 1 பரப்பின் விலை 1200000 (பன்னிரண்டு இலட்சம்)

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி தொடக்கம்
மாலை 6 மணிவரை

(16235)

தொடர்புகளுக்கு: ஜெயம்

077 814 7389, 077 988 5457


## சரத் வீர...

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த தொல்பொருள் மரபுரிமைகளுக்கு எதிராக நீதிபதிகளும் செயற்படுகின்றார்கள். ஆகவே, பௌத்த மரபுரிமைகளை பாதுகாக்க சிங்கள மக்கள் ஒன்றிணையவேண்டும் என வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர குறிப்பிட்டிருந்தார்.

நாட்டின் நீதித்துறையை அவமதிக்கும் வகையில் சரத் வீரசேகர வெளியிட்டுள்ள கருத்தை கடுமையாக கண்டிப்பதாக தெரிவித்த இலங்கை தமிழரசு கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், சரத் வீரசேகர எப்போதும் இனவாத கருத்துக்களையே வெளியிட்டுவருவதாக சுட்டிக்காட்டினார்.

அத்தோடு, "குருந்தூர் மலை விவகாரத்தில் நீதிமன்றத் தீர்ப்பு மீறப்பட்டிருப்பதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட பின்னணியிலேயே, அதனை பார்வையிடுவதற்காக நீதிபதி அங்கு பிரசன்னமானார்.

அவ்வாறிருக்கையில், தனது பணியைச் செய்த நீதிபதியொருவரை பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி இவ்வாறு விமர்சிப்பது ஏற்புடையதல்ல என்றும் சுமந்திரன் குறிப்பிட்டார்.

அதேவேளை இதுபற்றி கருத்து வெளியிட்ட முன்னாள் நீதியரசரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், தன்னை ஒரு சிங்கள அபிமானியாகவும், சிங்கள தேசியவாதியாகவும் காண்பித்துக்கொள்ளும் சரத் வீரசேகர கூறுகின்ற கருத்துக்களை தாம் ஏற்றுக்கொள்வதில்லை என்றும், சரித்திரத்தை அறிந்துகொள்ளாமல் "இலங்கை சிங்கள பௌத்த நாடு" என்று அவர் கூறுவது அவரது அறியாமையையே காண்பிக்கிறது என்றும் தெரிவித்தார்.

"சரத் வீரசேகரவுக்கு தன்னை ஒரு சண்டியர் போன்று காண்பித்துக் கொள்ளவேண்டிய தேவை இருக்கலாம். ஆனால், மீண்டும் மீண்டும் இலங்கையை சிங்கள பௌத்த நாடு என்று கூறுகின்ற அவர், முதலில் சரித்திரத்தை அறிந்துகொள்ளவேண்டும். துட்டகைமுனு சிங்களவர் அல்ல என்பதை அவர் தெரிந்துகொள்ளவேண்டும். ஒரே விடயத்தை நூறு முறை கூறுவதால் அது உண்மையாகிவிடாது. அதேபோன்று நீதிபதியை அவமதிக்கும் விதமாக சரத் வீரசேகர கூறியிருக்கும் கருத்துக்கள் மிக மிகக் கேவலமானவையாகும்" என்றும் விக்னேஸ்வரன் கண்டனம் வெளியிட்டார்.

மேலும், "பாராளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியை அச்சுறுத்தும் வகையில் சரத் வீரசேகர வெளியிட்டுள்ள இனவெறிக்கருத்தை கடுமையாக கண்டிக்கிறோம்" என்று குறிப்பிட்ட தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் இதுபற்றி மேலும் கூறியதாவது:

குருந்தூர் மலை விவகாரத்தில் தமிழ் நீதிபதியொருவரின் தலையீட்டை வாய்ப்பாக பயன்படுத்தி, சிங்கள மக்கள் மத்தியில் இனவெறியை தூண்டிவிடுவதற்கே சரத் வீரசேகர முயற்சிக்கின்றார்.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி குருந்தூர் மலைப்பகுதிக்கு வருகை தந்திருந்த அன்று நானும் அவ்விடத்தில் இருந்தேன். அன்றைய தினம் நீதிபதி சரத் வீரசேகரவை அப்பகுதியிலிருந்து வெளியேற்றவோ அல்லது பார்வையிடத் தடை விதிக்கவோ இல்லை. மாறாக, அங்கிருந்து வெளியே வந்து கருத்துக்களை வெளியிடுவதற்கு மாத்திரமே அனுமதி மறுக்கப்பட்டது. அவ்வாறிருக்கையில் இத்தகைய கருத்தை வெளியிடுவது என்பது நீதிபதியை அச்சுறுத்தி, அவர் சுயாதீனமாக செயற்படுவதை தடுப்பதுடன் இவ்வழக்கு விசாரணைகளிலிருந்து அவரை விலகச்செய்யும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதேயாகும்.

முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரான சரத் வீரசேகரவின் இக்கருத்துக்கள், இலங்கையின் அரச இயந்திரம் எந்தளவுக்கு இனவெறிப் போக்கில் இயங்குகிறது என்பதற்கான பிந்திய உதாரணமாகும்.

எனவே, நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் செயற்படும் சரத் வீரசேகர உடனடியாக கைதுசெய்யப்படவேண்டும் என்பதுடன் தேசிய பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவிலிருந்து நீக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தினார். (ம-7)

## இனப்...

யின் உடைய தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

நேற்று சனிக்கிழமை திருநெல்வேலிப் பகுதியில் அமைந்துள்ள திருமண மண்டபத்தில் இடம் பெற்ற தமிழரசு கட்சியின் மத்திய குழு கூட்டத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமர் மோடியை சந்திப்பதற்காக டெல்லி செல்லவுள்ளார்.

இந்நிலையில் தமிழ் மக்களுடைய இனப் பிரச்சினை இன விடுதலைக்கான தீர்வுகள் மற்றும் 13 ஆம் திருத்த சட்டம் தொடர்பில் இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தம் வழங்கும் வகையில் இந்திய பிரதமருக்கு சக தமிழ் கட்சிகள் இணைந்து கடிதம் ஒன்றை தயார் செய்துள்ளனர்.

குறித்த கடிதம் தொடர்பில் எமது கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி உள்ளோம்.

குறித்த கடிதம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் பார்வைக்காக அனுப்பப்பட்டுள்ள நிலையில் கடிதம் திரும்பி வந்ததும் கட்டாயம் அந்த கடிதம் அனுப்பப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7, 104)


## காணியும் வீடும் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழிப் பகுதியில் ஒன்றரைப் பரப்புக் காணியும் காணியுடன் இணைந்த வகையில் வீடும் விற்பனைக்கு உண்டு.

(16243)

077 358 2704



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(c-2062)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவற்குழியில் கிணற்றில் இருந்து 24 மோட்டார் ஷெல்கள் மீட்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழி-தச்சன்தோப்பு பகுதியில் உள்ள வீட்டுக் கிணறு ஒன்றில் இருந்து நேற்று சனிக்கிழமை மதியம் வெடிக்காத நிலையில் 24 மோட்டார் ஷெல்கள் மீட்கப்பட்டுள்ளன.

பாவனையில் இல்லாத நிலையில் காணப்பட்ட கிணற்றினை வீட்டு உரிமையாளர் சுத்தப்படுத்திய போது மேற்படி இரும்பு பெட்டி அவதானிக்கப்பட்ட நிலையில் உடனடியாக இராணுவத்தினருக்கு தெரியப்படுத்தி ஷெல் பெட்டி கிணற்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இராணுவத்தினரால் சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் வெடிபொருட்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

# கவிஞர் கெங்கா ஸ்ரான்லியின் விலையுயர்ந்த விதைகள் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நல்லூர் வடக்கு சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலடியை சேர்ந்த வே.முத்தையாவின் 100 ஆவது அகவை நிறைவு தினத்தை முன்னிட்டு கவிஞர் கெங்கா ஸ்ரான்லியின் "விலையுயர்ந்த விதைகள்" எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் முனைவர் சி.சிவலிங்காராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வெளியீட்டு உரையினை, கவிஞர்.ரஜிதா அரிச்சந்திரனும் மதிப்பீட்டுரையினை கவிஞர். வைரவநாதன் வசீகரனும் ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர் சதா.கனகலிங்கம் வாழ்த்துரையினையும் நிகழ்த்தவுள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானமும் சட்டத்தரணி சுதா கஜேந்திரகுமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (4-6-33)

# பொருட்களை விற்க வந்த நபர் வீட்டில் செய்த சூட்சுமமான செயல்

## மடக்கிப்பிடித்த இளைஞர்கள்

(கரணவாய்)

நடமாடும் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரி ஒருவர் வீட்டில் இருந்த கைத்தொலைபேசியை களவாடிச் சென்றுள்ள நிலையில் இளைஞர்கள் குறித்த நபரை மடக்கிப் பிடித்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கரணவாய் பகுதியில் இடம்பெறுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

நடமாடும் வியாபாரி ஒருவர் மதியவேளை ஒரு வீட்டின் வெளிக்கதவில் நின்றவாறு பொருட்கள் விற்பனை செய்வதற்காக வந்துள்ளேன். ஏதாவது பொருட்களை வாங்குங்கள் என வீட்டுக்காரர்களிடம் தெரிவித்தார்.

அதேவேளை மதிய உணவு சாப்பிட்டுக்கொண்டிருந்த வீட்டின் உரிமையாளர் சாப்பாட்டு நேரம் என்பதால் குறித்த நபரையும் உள்ளே அழைத்து வந்து சாப்பாடு கொடுத்திருக்கிறார். உணவு அருந்திவிட்டு மேசையில் இருந்த கைத்தொலைபேசியை எடுத்துச் சென்றுள்ளார் வியாபாரி.

சிறிது நேரம் கழித்து மேசையில் வைத்திருந்த தொலைபேசியை காணவில்லை என வீட்டின் உரிமையாளர் தேடியுள்ளார். அப்போது வீட்டின் உரிமையாளருக்கு குறித்த வியாபாரியின் மேல் சந்தேகம் எழ, வெளியில் சென்று தேட ஆரம்பிக்க, வீதியில் நின்ற இளைஞர்களிடம் விசாரிக்க அவர்களும் சேர்ந்து தேட ஆரம்பித்தனர்.

குறித்த நபரை ஒரு வழியாக தேடி மடக்கிப்பிடித்த இளைஞர்கள் அவரிடம் சோதனையிட்ட போது நான் தான் தொலைபேசியைத் திருடியதாகத் தெரிவித்து மன்னித்து விடுங்கள் எனத் தெரிவித்தார்.

இதனையடுத்து குறித்த நபருக்கு தண்டனைவழங்காமல் புத்திமதி கூறியுள்ளனர். எனவே இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் பொது மக்கள் விழிப்புடன் இருப்பது அவசியம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-60)

# வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளராக பற்றிக் டிரஞ்சன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக பற்றிக் டிரஞ்சன் நியமிக்கப்பட்டுள்ளார். நாளை திங்கட்கிழமை முதல் பற்றிக் டிரஞ்சன் தனது கடமைகளை பொறுப்பேற்க உள்ளார்.

இந்நிலையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக இருந்த உமா மகேஸ்வரன் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளராக நியமிக்கப்படவுள்ள நிலையில் அவரின் வெற்றிடத்திற்கே பற்றிக் டிரஞ்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக பற்றிக் டிரஞ்சன் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (4-6)

## முல்லைத்தீவு மனிதப் புதைகுழி

# ஐ.நா பிரதிநிதிகள் முன்பாகவே ஆய்வு மேற்கொள்ள வேண்டும்

(அராலி)

கொக்குதொடுவாய் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படுகின்ற புதைகுழி ஆய்வாராய்ச்சியானது, மனித உரிமை பேரவையில் இயற்றப்பட்ட பிரேரணைகளின் சாட்சியங்களை திரட்டுகின்ற பொறிமுறையின் அடிப்படையில் அதன் பிரதிநிதிகள் முன்பாக இந்த அகழ்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்குதொடுவாய் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படுகின்ற புதைகுழிகள் அகழ்வு ஊடாக பல மனித உடல்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

யுத்தத்தின் போது நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், யுத்தக்குற்றங்கள், மனிதத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்ற பல விடயங்களிற்கு சாட்சியமாக விளங்குகின்றது.

மனித உரிமை உயர்ஸ்தானிகர் அல்லது ஐ.நாவின் வதிவிடப்பிரதிநிதிகள் முன்பாகவே இந்த ஆகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதன் மூலமே, காணாமல் ஆக்கப்பட்டவர்கள், இறந்தவர்களின் தோண்டியெடுக்கப்படும் மனித புதைகுழிகளின் விபரங்களை சரியான முறையில் பதிவு செய்ய முடியும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-6-104)

# இராசிபலன்

09.07.2023
ஆனி 24, ஞாயிற்றுக்கிழமை
சப்தமி பின்னிரவு 1.50 மணிவரை

உத்திரட்டாதி பின்னிரவு 1.24 மணிவரை
சுபநேரம் - 8.58-10.28 மணிவரை
இராகுகாலம் - 4.28- 5.58 மணிவரை

சந்திராஷ்டமம் - ஆயில்யம், மகம்

வளவன்

**மேஷம்:** ஆரோக்கியத்தில் கவனம் தேவை, காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சயன சுகக் குறைவான நாள்.

**கடகம்:** கோபத்தைக் குறைத்துக்கொள்வது நல்லது, மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்:** நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நன்மைகள் நடைபெறும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உடல் நலன் சீராகும்.

**மகரம்:** சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**இடபம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**சிம்மம்:** உறவினர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** மகிழ்ச்சி கூடும் நாள், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்:** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு:** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்:** திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கற்பனை மிகுதியான நாள்.

கஞ்சனைப் புதைத்த பின்புதான் அவன் புதைத்து வைத்த செல்வங்கள் வெளியே வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 405
Viber 076 636 3378



# இடித்தழிக்கப்பட்ட பௌத்த விகாரைகள் மீது இந்துக் கோயில்களா!

“மதம் என்பது மனித ஈடேற்றத்திற்கானதே தவிர அதனூடே வன்மத்தை விதைப்பதற்கானதல்ல. உலகின் அனைத்து மதங்களும் அன்பையும் கருணையையுமே போதிக்கின்றன.

கடவுள்கள் பெயரளவிலும் வடிவங்களிலும் வேறுபட்டு இருந்தாலும் அதன் கரு; அன்பு, கருணை, மன்னிப்பு என்கின்றவற்றையே போதிக்கின்றன.”

## எல்லாவல மேதானந்த தேரருக்கு ஓர் அன்புமடல்

வணக்கத்துக்குரிய எல்லாவல மேதானந்த தேரர் அவர்களுக்கு அன்பு வணக்கங்கள். தங்களுக்கு மடல் எழுத வேண்டும் என நீண்டகால விருப்பம். ஆயினும் அதற்கான சந்தர் ப்பம் அமையவில்லை. தற்போது தங்களுக்கு மடல் எழுதும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி.

அண்மையில் தாங்கள் தெரிவித்த கருத்தொன்றை இங்கு தெரிவித்து தங்களுக்கான மடலைத் தொடங்குகின்றேன்.

தங்களின் கருத்து: “தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் இலங்கை தமிழர்களின் பண்டைய தாயகம் அல்ல. அப்படி யாராவது கூறினால் அவர்களுக்கு நான் பதில் வழங்கத் தயார். வடக்கு- கிழக்கில் கட்டப்பட்டுள்ள பழைமையான இந்துக் கோவில்கள் புராதன விகாரைக்ளை இடித்தழித்துவிட்டு அதன் மேலேயே கட்டப்பட்டுள்ளது.

வடக்கில் எடுக்கப்பட்ட கல்வெட்டுக்களின் மூலம் அங்கு சிங்களவர்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் இருக்கின்றன.

குருந்தூர் மலை தொல்லியல் தளத்திற்கு நான் முதன்முதலில் சென்றபோது அங்கு ஒரு கல்வெட்டு இருந்தது. பின்னர் அது அழிக்கப்பட்டுவிட்டது.

குருந்தூர் மலை தண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மூன்றாம் மகிந்து மன்னர் வந்ததாக அந்த கல்வெட்டில் காணப்பட்டது. கல்வெட்டில் அப்பகுதி குறுக்காமம் என பொறிக்கப்பட்டிருந்தது. தற்போதைய தண்ணிமுறிப்பு குளம் குருந்தவாவி என்பதே உண்மை.

வடக்கு-கிழக்கில் மக்கள் ஒரு பிரச்சினைக்கும் வருவதில்லை. அரசியல் வாதிகளே தமது அரசியல் தேவைக்காக மக்களைக் குழப்புகிறார்கள்” இவ்வாறு தாங்கள் தெரிவித்திருந்தீர்கள்.

மதிப்புக்குரிய தேரர் அவர்களே! தங்களின் குறித்த வார்த்தைகள் தமிழர்கள் மத்தியில் மிகவும் மன வேதனையை ஏற்படுத்தியுள்ளது என்பதை தாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.


வட-கிழக்கில் உள்ள இந்துக் கோவில்கள் இடிக்கப்பட்ட பௌத்த விகாரைகள் மேல் கட்டப்பட்டவை என்பது தொன்மையான தமிழினத்தின் வரலாறுகளையும் மத நம்பிக்கைகளையும் சுக்குநூறாக உடைக்கும் கருத்தாகும்.

மரியாதைக்குரிய தேரர் அவர்களே!

மதம் என்பது மனித ஈடேற்றத்திற்கானதே தவிர அதனூடே வன்மத்தை விதைப்பதற்கானதல்ல. உலகின் அனைத்து மதங்களும் அன்பையும் கருணையையுமே போதிக்கின்றன.

கடவுள்கள் பெயரளவிலும் வடிவங்களிலும் வேறுபட்டு இருந்தாலும் அதன் கரு; அன்பு, கருணை, மன்னிப்பு என்கின்றவற்றையே போதிக்கின்றன.

இந்த விடயத்தை யான் தங்களுக்குச் சொல்லித்தான் தெரியவேண்டியதில்லை. இருப்பினும். தங்களின் மேற்குறித்த கருத்தின் விளைவே தங்களுக்கு இதை நினைவூட்ட விளைந்தேன். அதற்கு தங்களிடம் மன்னிப்பையும் வேண்டிநிற்கின்றேன்.



2009 இறுதி யுத்தம் வன்னிப் பெருநிலப் பரப்பில் தமிழினம் கொத்துக் கொத்தாய் கொன்றொழிக்கப்பட்டது.

பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என அரசாங்கம் அறிவித்திருந்தாலும் அங்கு பெரும்பான்மையாக இறந்து போனது அப்பாவிப் பொதுமக்களே.

பொதுமக்களை மனித கேடயமாக பாவிக்கும் போர் வேண்டாம். போரை உடன் நிறுத்துங்கள் என சர்வதேசம் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் போர் நிறுத்தப்படவில்லை.

சரி போர் தான் நிறுத்தப்படா விடினும் பரவாயில்லை. அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதாவது தடுக் கப்பட்டிருக்கலாம். ஆனால் அது நடக்க வில்லை.பயங்கரவாதத்திற்கு எதிரான போர் நிறைவுற்றதாய் அரசு அறிவித்திருந்த போது தமிழினத்தின் எத்தனையாயிரம் உயிர்கள் பறிபோனது என்ற உண்மையை தாங்களும் தங்கள் சார்ந்தவர்களும் உணர்ந்து கொள்ள வில்லை என்பது தமிழர் மத்தியில் மிகப் பெரும் வலியாகவே இருந்து வருகிறது.

போர் நிறைவுற்று இற்றைக்கு 14 ஆண்டுகள் கடந்துவிட்டன.இற்றை வரை தமிழினத்திற்கான அரசியல் தீர்வையேனும் பெற்றுத் தரவேண்டும் என தாங்கள் சிந்திக்காதது ஏன் என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் உண்டு.

ஏன் என்றால் இலங்கைத் திருநாட்டில் ஆட்சியாளர்களை கட்டுப்படுத்தவல்ல அதிகாரம் பௌத்ததேரர்களிடம் மாத்திரமே உண்டென்பதை யாம் அறிவோம்.

பௌத்த தேரர்களின் பேச்சை அவர்கள் ஒருபோதும் அலட்சியம் செய்வதும் இல்லை.

தமிழ் அரசியல் வாதிகள் தங்களின் அரசியல் வெற்றிகளுக்காக தமிழ் மக்களைக் குழப்புகிறார்கள் என தாங்கள் தெரிவித்திருந்தீர்கள்.அதில் சில உண்மைகள் இருக்கத்தான் செய்கின்றன.

ஆயினும் தமிழர்களின் வரலாற்றுச் சின்னங்களை பாதுகாப்பது தொடர்பான அவர்களின் நடவடிக்கைகள் தமிழ் மக்களை குழப்புவதாக தெரிவித்த தங்களின் கருத்தே குழப்ப மாக உள்ளது.

ஈழத்தின் பஞ்ச ஈச்சரங்கள் எனப் போற்றப்படுகின்ற நகுலேஸ்வரம், திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம், முன்னேச்சரம், தொண்டீச்சரம் போன்ற பஞ்ச ஈச்சரங்களும் தங்கள் மேற்சொன்ன கருத்திற்குள் உள்வாங்கப்படுமா?

இதில் திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் ஆகியன சம்பந்தர், அப்பர் போன்ற சமயக் குரவர்களால் பாடல் பெற்ற தலங்களாகும்.

இவ்வாறான சூழ் நிலையில் வட- கிழக்கில் இருக்கும் இந்துக் கோவில்கள் அனைத்தும் பௌத்த விகாரைகளை இடித்தழித்துவிட்டு நிறுவியவை என தாங்கள் கூறிய கருத்தில் எது உண்மை, எது பொய் என்பதை பகுத்தறிவது மிக முக்கியமானது.

அன்பு நிறைந்த தேரர் அவர்களே! தமிழினம் மிகத் தொன்மையானது. அந்த இனத்தின் கலாசார விழுமியங்கள் மிக உன்னதமானது. இலங்கைத் திருநாடு அவர்களின் பூர்வீக நாடு. இதை தாங்களும் அறிவீர்கள் என நம்புகிறோம்.

இலங்கையில் வாழும் அனைவரும் ஒரு தாய் பெற்ற பிள்ளைகள் என வாழவே விரும்புகிறார்கள்.இந்த நாட்டில் இனங்களுக்குள் ஏன் முரண்பாடு ஏற்பட்டது என்பது பற்றி நாம் இனி ஆராய்வது பிரயோசனம் அற்றது.

ஏனென்றால் எது நடக்கக் கூடாதோ அவை அனைத்தும் நடந்து முடிந்து விட்டது.போரின் கொடும் பிடியில் தமிழினம் பட்ட துன்பம் கொஞ்ச நஞ்சமல்ல.போருக்குப் பின் மனமளவிலும் உடல் அளவிலும் தமிழினம் மிகப் பலவீனம் அடைந்த இனமாகவே இன்றுவரை வாழ்ந்து வருகின்றது.

கொடும் பிடியில இருந்து கொஞ்சம் கொஞ்சமாய் மீண்டு வரும் தமிழினத்தின் மனங்களை தயவு செய்து காயப்படுத்தாதீர்கள் என்பது எம் தயவான வேண்டுகோள்.

இந்த நாடு எம் அனவைருக்கும் சொந்தமானது. இதை கட்டி எழுப்ப வேண்டியது எம் ஒவ்வொருவருடைய கடமை. நாம் இன ரீதியாகவும் மத ரீதியாகவும் பிரிந்து நிற்காமல் இலங்கையர் என்று ஒன்றுபடுவோம்.எம் தாய் நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்வோம் எனக் கூறி தங்களுக்கான மடலை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

அன்புடன்: **அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் மூப்பரைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் நிலவிய அமைதியைக் கலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி-** அது சரி எங்க இன்னமும் மூப்பரைக் காணவில்லை என்ன சங்கதியோ.

**சாத்திரியார்-** மூப்பர் டி.எஸ். ஒபிசுக்கு அலைந்து திரியுறாராம். அதுதான் ஆலடிக்கு வரல்லப்போல.

**கங்காணி-** ஏன் என்ன சங்கதி.

**சாத்திரியார்-** இப்பதானே சமுர்த்தி மீள் பரிசீலனை நடக்குது. அதில மூப்பரின்ர மகன்ர குடும்பத்திற்கு சமுர்த்தி கிடைக்கல்லையாம்.

**சிறாப்பர்-** இதென்ன நாசமறுப்பு. மூப்பற்ற மகன்ர குடும்பத்திற்கு சரியான கஷ்ரம். அதோட நாலைஞ்சு பிள்ளைகள். அந்தக் குடும்பத்திற்கு சமுர்த்தியை நிப்பாட்டினால், அதுகள் என்னதான் செய்யமுடியும்.

**பண்டிதர்-** நீங்கள் இதைச் சொல்லுறியள். கோண்டாவில் பகுதியில தாய், தந்தையை இழந்த இரண்டு பிள்ளைகளுக்கு இப்ப சமுர்த்தியை நிப்பாட்டியிருக்கினம். ஒரு பிள்ளை பத்தாம் தரத்திலும் மற்றப் பிள்ளை எட்டாம் தரத்திலும் படித்துக்கொண்டிருக்கினம். அப்பிடியிருந்தும் அந்தப் பிள்ளைகளின்ர சமுர்த்தியை நிப்பாட்டியிருக்கினம் எண்டா பாருங்களன்.

**விதானையார்-** ஓ! இப்ப வசதி படைத்தவியளுக்குத் தானே சமுர்த்தி நிவாரணம் கிடைக்குது.

**கங்காணி-** அதெண்டால் உண்மை தான். வசதி படைச்சவியளின்ர சமுர்த்திக் கொடுப்பனைவை நிப்பாட்டினால், பிறகு அவர்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கும் அந்தப் பகுதி விதானையாருக்கும் அபிவிருத்தி உத்தியோகத்தருக்கும் எதிராகப் பெட்டிசம் போடுவினமல்லோ. அதனால தேவையில்லாத சோலி எதற்கு எண்டு நினைச்சு ஏழைகளின்ர சமுர்த்திக் கொடுப்பனவை நிறுத்தி, வசதி படைத்தவியளுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்குகிற கலாசாரம் எங்களிட்ட இருக்குது தானே.

அந்த அடிப்படையில தான் ஏழைகளுக்கு சமுர்த்திக் கொடுப்பனவை நிறுத்தியிருக்கினம்.

**சாத்திரியார்-**அதோட, சரியான புள்ளி விபரங்களும் மேற்குறித்த அலுவலர்களிடம் இல்லை. ஒரு சில உத்தியோகத்தர்கள் மட்டும் தான் தங்கட கடமையை சரியான புள்ளிவிபரங்களோட செய்யினம். ஏனைய உத்தியோகத்தர்கள் ஏழைகளின்ர வயிற்றில அடிச்சுப் போட்டு போகினம்.

**வாத்தியார்-** என்னயிருந்தாலும் இது விடயத்தில பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீளவும் சமுர்த்திக் கொடுப்பனவு கிடைக்க சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்கள் நடவடிக்கை எடுக்க வேணும். அதோட அந்தந்த மாவட்ட செயலகங்களும் இதுவிடயத்தில இறுக்கமாக இருந்தால் தான் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பரிகாரம் காண முடியும்.

எனவே உண்மையில சமுர்த்திக் கொடுப்பனவு கிடைக்க வேண்டியவர்களுக்கு அது கிடைக்காமல் போயிருந்தால், அவர்கள் மேன் முறையீடு செய்வதற்கும் மாவட்ட அரசாங்க அதிபர்களை நேரடியாகச் சந்தித்து தங்கட நிலைமையை கூறுவதற்கும் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட வேணும் என்றொரு தீர்மானத்தை ஆலடியில் நிறைவேற்றுவம்.

இவ்வாறு வாத்தியார் கூற, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து அந்தத் தீர்மானத்தை ஏக மனதாக நிறைவேற்றினர்.

தொடர்ந்து ஆலடியில் சிறிது நேரம் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைக்க விதானையார் விஸ்வலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்-** நாங்கள் ஆலடியில் தீர்மானங்களை நிறைவேற்றுகிறம். இது எங்கட கடமை தான். இந்த தீர்மானங்களை யார் நடைமுறைப்படுத்த போகினம்.

இந்தாப் பாருங்க, முல்லைத்தீவு நீதிபதி பௌத்தத்திற்கு எதிராகச் செயற்படுகிறார் என இனத்துவேசி சரத்வீரசேகர பாராளுமன்றத்தில் பேசுகிறார்.

ஒரு நீதிபதி தன்ர கடமையைச் செய்வதில் சிங்களப் பேரினவாதம் குறுக்கிடுவது எண்டால் இந்த நாட்டில நீதியை எப்படி நிலை நிறுத்துறது.

**பண்டிதர்-** இப்படியான இடங்களில சட்டத்தரணிகள் தங்கட எதிர்ப்பை வெளிப்படுத்த வேணும்.

**சாத்திரியார்-** உண்மை தான்.நீதித்துறைக்கு எதிராகக் கருத்துரைக்கும் சரத் வீரசேகரவிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேணும் எண்டு சட்டத்தரணிகள் கோசம் போட்டால் தான் நீதித்துறையைக் காப்பாற்ற முடியும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு இருக்கின்ற விசேட உரிமையைப் பயன்படுத்தி, எதுவும் கதைக்கலாம். நீதித்துறையை விமர்சிக்கலாம் எண்டால், எல்லாம் அம்போ எண்டு தான் போகும். இவ்வாறு சாத்திரியார் ஆவேசமாகக் கூறியதும் ஆலடி நிசப்தமாகியது. நிசப்தத்தைக் கலைக்க சிறாப்பர் கனகசபை குரல் கொடுத்தார்.

**சிறாப்பர்-** சட்டத்தரணிகளும் கட்டண விடயத்தில ஒரு நடைமுறையைப் பின்பற்ற வேணும். மேலும் சட்டத்தரணிகள் கண்டபாட்டில கட்டணம் அறவிடுவதாகப் பொது மக்கள் பலரும் கவலைப்படுகினம்.

அண்மையில ஒரு இளம் சட்டத்தரணி கோயில் பிணக்குத் தொடர்பில சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து ஐந்து லட்சம் ரூபாவை வாங்கிக் கொண்டு எதுவும் செய்யாமல் விட்டு விட்டதாகப் பாதிக்கப்பட்டவர்கள் கூறுகினம்.

உண்மையில சட்டத்தரணிகளும் நீதிதவறாது நடந்து கொள்ள வேணும்.இது விடயத்தில சட்டத்தரணிகள் சங்கம் வழக்குகளின் தன்மையைப் பொறுத்து ஒரு கட்டண விபரத்தை வரையறுத்து அதை நடைமுறைப்படுத்துமாறு சட்டத்தரணிகளை வலியுறுத்த வேண்டும்.

தேவையெண்டால், சிறப்பு நிலைச் சட்டத்தரணிகளுக்கு ஒரு மேலதிக கட்டணத்தையும் தீர்மானிக்கலாம். எதுவாக இருந்தாலும் ஒரு பொதுவான கட்டணம் இல்லாமல் போனால்,பொது மக்கள் சட்டத் தரணிகளைத் திட்டுவினம்.

ஆகையால, எல்லாச் சட்டத்தரணிகளையும் ஒரு நியாயத்துவ கட்டண எல்லைக்குள்ள கொண்டு செல்ல வேண்டும்.இது விடயத்தில சட்டத்தரணிகள் சங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுக்க வேண்டும் எண்டு இந்த நேரத்தில கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு சிறாப்பர் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.



**சட்டத்தரணிகள் அறவிடும் கட்டணத்திற்கு நியாயத்துவ வரையறை வேண்டும்**

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடவுள் மனிதனை ஏன் படைத்தான் வியாசரே?

**தமிழ் யாழ்ப்பாணம்**

**மனிதப் புதைகுழி இன்னும் வருமா வியாசரே?**

இந்த அரசு தமிழினத்துக்கு நியாயமான தீர்வைத் தரும் என நம்பிக்கொண்டிருக்கும் தமிழினம் எவ்வளவு முட்டாள்த்தனமான இனம் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.
முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தமிழர் தேசத்தில் கண்டுபிடிக்கப் பட்ட எத்தனையாவது மனிதப் புதைகுழி?
ஏலவே கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழிகள் பற்றிய அறிக்கைகள் ஏன் இன்னமும் வெளியிடப்படவில்லை?
அப்படியெனின் யாருக்கோ சார்பாக சிலர் செயற்படுகின்றார்கள் என்று தானே பொருள்.
தமிழினத்துக்கான நீதி கிடைக்க வேண்டும் எனில் அந்தப் புதைகுழியில் கிடப்பவர்கள் எழுந்து வந்து சொன்னாலே தவிர வேறு எந்த வகையிலும் கிடைக்கப் போவதில்லை.

**சுதன் குப்பிழான்**

**தமிழ்த் தலைவர்கள் தாங்கள் ஒன்று பட்டு நிற்காமல் சர்வதேசத்தை ஒன்று பட்டு நிற்கச் சொல்லி கேட்பது எந்த வகையில் நியாயம் வியாசரே?**

அதுதான் எங்கள் இனத்திற்கு கிடைத்த சாபக்கேடு தம்பி.
என்ன செய்வது நாம் தான் சுயநலவாதிகளுக்கு வாக்களிக்க பழகிக் கொண்டு விட்டோமே. எம்மிடம் தவறுகளை வைத்துக் கொண்டு அடுத்தவரைக் குறை கூறிப் பயன் ஏதும் இல்லை.
தவறு செய்பவனை விட தவறு செய்ய தூண்டியவனுக்கே தண்டனை அதிகமாகக் கொடுக்க வேண்டும்.
அப்படிப் பார்த்தால் இவர்களுக்கு வாக்களித்த எமக்கே தண்டனை தர வேண்டும்.
எம்மிடம் தவறுதலை வைத்துக்கொண்டு மற்றவரைக் குறை கூறாமல் அடுத்த தேர்தலில் இவர்களுக்கு ஒரு பாடம் புகட்டுவோமே.

**மதுவன் மீசாலை**

**நடிகை சரோஜாதேவியின் முதல் படம் எது என்று கூறுங்கள் வியாசரே?**

கன்னடத்து பைங்கிளி, அபிநய சரஸ்வதி என்று ரசிகர்களால் அழைக்கப்பட்ட சரோஜாதேவி தனது 14 ஆவது வயதில் 1955 ஆம் ஆண்டு காளிதாசா என்ற கன்னடப் படத்தின் மூலம் அறிமுகமானார்.
161 திரைப்படங்களுக்கு மேல் நடித்த இவர் இறுதிவரை கவர்ச்சி வேடங்களில் நடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
எம்.ஜி.ஆர், சிவாஜி, ஜெமினி கணேசன், ஜெய்சங்கர் போன்ற முன்னணி நடிகர்களுடன் இவர் நடித்திருந்தாலும் எம்.ஜி.ஆருடன் நடிப்பதையே ரசிகர்கள் விரும்பினர் என அவரே ஒரு பேட்டியில் தெரிவித்திருந்தார்.
கன்னடத்தை தாயகமாகக் கொண்டிருந்தாலும் தமிழில் அதிக விருப்புக் கொண்ட இவர் தமிழையும் கற்றுத் தேர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




**அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை 076 097 3126 என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**


**திகான் வடமராட்சி**

**தமிழினத்தின் அடிப்படை உரிமைகள் சிதைக்கப்பட யார் காரணம் என்று கூறமுடியுமா வியாசரே?**

இதற்குக் காரண கர்த்தாக்கள் பற்றிக் கூறுகின்றேன். அவர்கள் யார் என்பதை நீங்களே கண்டுபிடியுங்கள்.

- காலம் காலமாக வந்த ஆட்சியாளர்களை நம்பி மோசம் போனவர்கள்.
- தெற்கிற்கு தலையும் வடக்கிற்கு வாலையும் காட்டிய விலாங்குகள்.
- தேர்தலின் போது தேசியம் பேசியும் தேர்தலில் வென்றவுடன் அநியாயமும் பேசுபவர்கள்.
- பாராளுமன்ற போமிற்றில் வருடா வருடம் வாகன அனுமதி பெற்று அதைக் கோடிகளுக்கு விற்று ஆதாயம் தேடியவர்கள்.
- சொத்து சேர்த்து சொர்க்காபுரி வீடு கட்டி சொகுசு வாழ்க்கை வாழ்பவர்கள்.
- தம் வங்கிக்கணக்கை உயர்த்துவதற்கு பேரினவாத சக்திகளின் அடிவருடிகளாய் செயற்பட்டவர்கள்.
- தேர்தல் வந்தவுடன் தலைவரைத் தூக்கிப் பிடிப்பதும் அது முடிந்ததும் அவரைப் பற்றி மறந்து செயற்பட்டவர்கள்.
- கைதூக்க இரண்டு கோடியும் வாய் மூட மூன்று கோடியும் தலை ஆட்ட ஐந்து கோடியும் பாராளுமன்றம் வராதிருக்க ஆறரைக் கோடியும் வாங்கி எம் இனத்துக்கு துரோகம் செய்த துரோகிகள்.

என்ன திகான் இப்போது கண்டுபிடித்து விட்டீர்களா?



மனிதப் புதைகுழி இன்னும் வருமா வியாசரே?

**ஜெகமோகன் கொக்குவில்**

**அன்பு வியாசரே தாயகத்தில் விவாகரத்துக்களும் வீட்டு வன்முறைகளும் அதிகரித்து விட்டதே?**

"ஓடுகிற வண்டியோட ஒற்றுமையா இரண்டு மாடும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்தால் என்ன ஆகும் எண்ணிப்பாரு"
இது ஒரு சினிமாப் பாடல். ஆனாலும் குடும்பத்தின் சமாந்தரத்தை மிகச் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றது.
இப்போது கணவன்-மனைவி மீதோ மனைவி-கணவன் மீதோ கரிசனை கொள்வதாய் தெரியவில்லை.
பெயரளவில் குடும்பம் எனும் இயந்திரங்களாய் உருள்கிறார்களே தவிர, அவர்கள் வாழ்வது வாழ்வல்ல என்பதே உண்மையானது.
நாம் வாழும் வாழ்க்கை மற்றவருக்கு பாடமாக அமைய வேண்டுமே தவிர அடுத்தவர் சிரிக்கும் படி இருக்கக்கூடாது என்பதைப் புரிந்து கொண்டாலே போதும்.
விவாகரத்துக்கள் நடப்பதற்கு வாய்ப்பே இல்லை.

**ஜோசப் துன்னாலை**

**ஒரு நல்ல விடயத்திற்காக ஒருவரைப் பற்றி விசாரிக்கும் போது அவரைப் பற்றி தவறாக கூறும் உறவுகள் பற்றி?**

மனித மனங்களில் வன்மம் அளவுக்கு மிஞ்சி விட்டது என்பதே இதன் பொருள்.
அதிலும் மற்றவரின் வளர்ச்சியை உறவுகள் ஒருபோதும் விரும்புவதில்லை. ஒருவரின் நியாயமான உழைப்பைக் கூட கொச்சைப் படுத்தி ஏதோ களவு செய்து சொத்து சேர்த்ததாய் கதை கட்டி விடுவார்கள்.
பொறாமையின் உச்சம் உறவுகளின் வளர்ச்சியை ஒருநாளும் ஏற்றதாய் சரித்திரம் இல்லை. இந்த ரகத்தில் எல்லோரையும் எடுத்து விட முடியாது. உறவுகளுக்காக உயிரையும் கொடுக்கக் கூடியவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.
ஆனாலும் அதிகம் பொறாமைக் குணம் கொண்டவர்கள் என்பதால் நல்லவர்கள் பக்கம் குறைவாகவே இருக்கும்.

**அபிஷேக் வதிரி**

**கடவுள் மனிதனை ஏன் படைத்தான் வியாசரே?**

கடவுளுக்கு தான் விளையாட ஒரு விளையாட்டுப் பொருள் தேவை.
அதற்காக படைக்கப்பட்டதே இந்த மனித குலம்.
இதைப் புரியாத மனிதனோ நீ பெரிது, நான் பெரிது என அடிபட்டுக் கொண்டிருக்கிறான்.
என்னிடம் அணுகுண்டு உண்டு. ஆதலால் நான் தான் உலகின் வல்லரசு என்று திமிர் பிடித்து அலைகிறான்.
என்னிடம் யாரும் சீண்டினால் உலகை அழித்து விடுவேன் என்று ஆணவம் கொண்டு நடக்கிறான்.
இவை அனைத்தும் அவனின் (கடவுள்) கையில் உள்ள நூலை இழுக்கும் வரைதான் என்பது ஏனோ மனிதனுக்கு புரியவே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம்: வல்லவனுக்கு வல்லவன்
இசை: வேதா
பாடல்: கவியரசு கண்ணதாசன்
பாடியவர்: டி.எம்.சௌந்தரராஜன்



நூறுமுறை பிறந்தாலும்
நூறுமுறை இறந்தாலும்
உனைப் பிரிந்து வெகுதூரம் – நான்
ஒருநாளும் போவதில்லை
உலகத்தின் கண்களிலே
உருவங்கள் மறைந்தாலும்
ஒன்றான உள்ளங்கள்
ஒருநாளும் மறைவதில்லை!

ஓராயிரம் பார்வையிலே
உன் பார்வையை நான் அறிவேன்
உன் காலடி ஓசையிலே
உன் காதலை நான் அறிவேன்

இந்த மானிடக் காதலெல்லாம்
ஒரு மரணத்தில் மாறி விடும்
அந்த மலர்களின் வாசமெல்லாம்
ஒரு மாலைக்குள் வாடி விடும்
நம் காதலின் தீபம் மட்டும்
எந்த நாளிலும் கூட வரும்

ஓராயிரம் பார்வையிலே
உன் பார்வையை நான் அறிவேன்
உன் காலடி ஓசையிலே
உன் காதலை நான் அறிவேன்

இந்த காற்றினில் நான் கலந்தேன்
உன் கண்களை தழுவுகின்றேன்
இந்த ஆற்றினில் ஓடுகின்றேன்
உன் ஆடையில் ஆடுகின்றேன்
நான் போகின்ற பாதையெல்லாம்
உன் பூமுகம் காணுகின்றேன்

ஓராயிரம் பார்வையிலே
உன் பார்வையை நான் அறிவேன்
உன் காலடி ஓசையிலே
உன் காதலை நான் அறிவேன்

# மாணவர்களுக்கு தற்காப்புக் கலையின் அவசியம்

கராத்தே என்பது தற்காப்புக் கலைகளுள் இதுவும் ஒன்றாகும். இக்கலை ஆயுதங்கள் இல்லாத ஓர் போர் அமைப்பைக் கொண்டுள்ளது. இது உடலுக்கும் மனதுக்கும் நன்மை பயக்கும் ஒரு விளையாட்டாக திகழ்வதோடு உடல் உழைப்பு மட்டுமல்ல மன முயற்சியும் அவசியமாகின்றது. அத்தோடு உடலுக்கும் மனதுக்கும் இடையே சமநிலையை அடைவதே இதன் குறிக்கோள். இதற்கு மிக முக்கியமான விசயம் ஒழுக்கம். இக்கலையை கற்பவர்கள் வாழ்க்கையில் சமநிலையை அடையும் அளவிற்கு அதன் தன்மையைப் விளங்கிக் கொள்கிறார்கள்.

இன்றைய சமகால மாற்றங்களாலும் தொழில் நுட்ப வளர்ச்சியினாலும் பல நன்மைகளும் தீமைகளும் காணப்படுகின்றன. அதில் ஒரு சில மாணவர்கள் நன்மைகளை அடைந்து கொண்டாலும் பெரும்பாலும் பல மாணவர்கள் தீமையான விடயங்களில் ஈடுபடுவதனால் பல்வேறு இன்னல்களுக்கும் சவால்களுக்கும் உட்படுகின்றார்கள் என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. உதாரணமாக மாணவர்கள் தொலைபேசி விளையாட்டுக்களிலும் தொலைக்காட்சி விளையாட்டுக்களிலும் ஈடுபடுவதனால் பாதகமான மனவெழுச்சிகளும் மந்தநிலையான அறிவு மட்டமும் தூக்கமின்மை, உடற்சோர்வு, மனச்சோர்வு, கல்வியில் நாட்டமின்மை, ஒழுக்கச் சீர்கேடுகள் போன்ற செயற்பாடுகளுக்கு மாணவர்கள் தள்ளப்படுகின்றார்கள். அதுமட்டுமன்றி இவை உடல் அசைவற்ற விளையாட்டாக காணப்படுவதனால் சிறுவயதினிலேயே மாணவர்களுக்கு உடற்பருமன் அதிகரிப்பு, சோம்பேறித் தன்மை ஏற்படுகின்றன.

மாணவர்களை மையமாகக் கொண்ட போதைப் பொருள் வியாபாரம், சினிமாக்களின் மோகம், சமூக வலைத்தளங்களின் ஆக்கிரமிப்பு போன்றவற்றிற்கு மாணவர்கள் அடிமைப்படுவதால் தற்கொலை, பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாதல், மன அழுத்தம், நெறிபிறழ்வு, ஒழுக்க சீர்கேடுகள் என்பவை தற்கால மாணவர்கள் மத்தியில் அவதானிக்கக் கூடியதாக காணப்படுகிறது.

அது மட்டுமல்ல பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் நெருக்கமான உறவு அற்றுப் போதல். இதனால் பிள்ளைகளின் செயற்பாடுகளை பெற்றோரால் இனங்காண இயலாத நிலை காணப்படுகிறது. இதனை மாற்றியமைக்க சிறந்த வழிமுறையாக கராத்தே கலை காணப்படுவதோடு தற்கால மாணவர்கள் இக்கலையினை தெரிவு செய்வார்களாயின் ஒரு ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்ப முடியும். அதாவது,

இக்கலையின் முக்கிய நன்மைகளை நோக்குகையில் கராத்தே என்பது ஒரு உடற்பயிற்சி மட்டுமல்லாது சம வயதுடையவர்களுடன் பழகும் முறைக்கு அப்பாற்பட்டதாகும். இந்த விளையாட்டு மாணவர்கள் தங்களை ஒழுங்குபடுத்த பெரிதும் பங்காற்றுகிறது. அதாவது நல்ல மதிப்புக்களை அறிவுறுத்துவதுடன் ஒழுக்கம் முக்கியத்துவம் பெறுகிறது. கவனக்குறைவு, மன இறுக்கம், கவலைப் பிரச்சினைகள், கொடுமைப்படுத்துதல், பயம் போன்றவற்றால் பாதிக்கப்படும் மாணவர்களிற்கு கராத்தே பயனுள்ளதாகவும் ஒழுக்கம் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது. இதனைக் கற்பதன் மூலம் மாணவர்கள் தங்கள் ஆற்றலை மாற்றவும் ஓய்வெடுக்கவும் ஆற்றலை வெளியிடவும் அவர்களின் கவனத்தை மேம்படுத்தவும் அவர்களின் கவனச் சிதறல்களை குறைக்கவும் அவர்களின் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தவும் முடியும். இவை அனைத்தும் நம்பிக்கை மற்றும் தன்னம்பிக்கையைப் பெற முக்கிய பங்காற்றுகிறது.

கராத்தே என்பது சண்டையிடுதல் என்று பல பெற்றோர்கள் கருதுகிறார்கள். இதனால் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கத் தயங்குகிறார்கள். ஆனால் அவர்கள் அப்படி நினைத்தால் அது தவறு. ஏனெனில் கராத்தே என்பது தங்களை தற்காத்துக் கொள்ள கற்றுக் கொள்கிறார்கள். வன்முறையைத் தவிர்த்து நடந்து கொள்வார்கள். அத்துடன் மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் நிறைவாகவும் தங்கள் மீது பாதுகாப்பும் நம்பிக்கையையும் பெற்று அதிக தன்னம்பிக்கை கொண்டவர்களாகத் திகழ்வார்கள்.

தற்காப்பு நுட்பங்களைக் கற்பதன் மூலம் ஒழுக்கம், சுய கட்டுப்பாடு, கற்றல் பரிணாமம், தோழமை போன்ற காரணிகளை மேம்படுத்தவும் உதவுகிறது. இன்றைய நவீன தொழில்நுட்ப உலகில் பரவிக் கிடக்கும் உடனடி உணவுப் பழக்கத்தினால் உடலும் உள்ளமும் பல்வேறு நோய்களால் அவதியுறும் தன்மை காணப்படுகிறன்றன. இன்றைய அவசர உலகில்அவசியமான உடற்பயிற்சிகளுக்கு நேரமற்று வாழ்ந்து கொண்டிருப்பதே இத்தகைய நோய்களுக்கு வழிவகுக்கும் முதல் காரணியாகும். உடற்பயிற்சி அவசியம் என அறிந்திருந்தும் அதனைச் செய்ய மறுக்க பல காரணங்களும் உள்ளன. இதனால் உடல் பாதிப்பு மட்டுமன்றி மனமும் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அதில் மன அழுத்தமானது பலரை தற்கொலை வ்ரை கூட்டிச் செல்கிறது. எனவே மனமும் உடலும் ஆரோக்கியமாக இருக்கும் போதுதான் நம்மால் பூரணத்துவ மிக்க வாழ்வொன்றை வாழ முடியும். அந்த வகையில் உடலையும் உள்ளத்தையும் வளப்படுத்த உதவும் இக்கராத்தே கலையானது நம்மையும் நம் சமுதாயத்தையும் மேம்படுத்துவதாக அமைகிறது.

இன்று சில பாடசாலைகளில் மாணவர்களுக்கு தற்காப்புக் கலைகளை சிறுவயது முதலே கற்பிக்கப்படுவதும் மாணவர்களை ஊக்குவிப்பதும் ஆரோக்கியமான மாணவச் சமுதாயத்தை உருவாக்குவதற்கு துணை செய்கிறது. இலங்கையில் பாடசாலைகள், பல்கலைக் கழகங்களைப் பொறுத்த வரையில் கராத்தே கலைகள் பயிற்றுவிக்கப்படுவதோடு மாணவர்களிற்கு பல போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்புக்களையும் வழங்குகிறது.

திறந்த போட்டிகள், பாடசாலை மட்டப் போட்டிகள் எனப் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வருவதென்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். இக்கலையினைப் பயிலும் மாணவர்கள் தம்மைத் தரப்படுத்தலில் அடுத்த நிலைக்கு முன்னேறிச் செல்ல துணை செய்கிறது.

ஒரு நாட்டின் வளம் அந்த நாட்டின் கல்வித் தரத்தைப் பொறுத்தே அமைகிறது. நாட்டிற்கும் மனிதனுக்கும் தவிர்க்க முடியாத ஒன்றே கல்வியாகும். எனினும் புத்தகப் படிப்பு, தேர்ச்சி என்ற வட்டத்தினுள் இருந்து மாணவர்களும் பெற்றோர்களும் விடுபட்டு அதையும் தாண்டி மாணவர்களுக்கு வாழ்வில் எதிர்நோக்கப்படும் சவால்களைச் சமாளிக்கும் திறன்களை வளர்க்கும் இக்கராத்தே கலை பாடசாலை மாணவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். சில பாடசாலைகளில் கராத்தே வகுப்புக்கள் ஆரம்பித்திருப்பது போன்று அனைத்துப் பாடசாலைகளிலும் இக்கராத்தே கலையினை ஆரம்பித்து வைத்தால் ஓர் ஆரோக்கியமான மாணவச் சமூகத்தை உருவாக்கிக் கொள்ள முடியும்.

V. Krishnavel,
Teacher (J/Nelliyady central college),
Master of arts in political science PGDE
Black belt 3rd Dan,
Visiting instructor University of Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை கடை திறக்கப்படாது

"கையறி யாமை உடைத்தே, பொருள் கொடுத்து மெய்யறி யாமை கொளல்"

என்பது திருவள்ளுவர் வாக்கு. அதாவது மதுவை விலை கொடுத்து வாங்கி உண்டு மதி மயங்கிக் கிடப்பது போன்ற மடைமைத்தனம் இந்த உலகில் வேறேதும் இல்லை என்பதாகும்.

ஆண்டாண்டு காலமாய் எமது தமிழ்ச் சமூகம் மதுவைத் தொடுவது கொடுமையான செயல் என்றே வகுத்து வைத்திருக்கின்றது.

ஆயினும் போதை, மனித வாழ்வை கருவறுத்துக் கொண்டே தான் இருக்கிறது.

வட பகுதியில் போதையின் தாக்கம் 2009 இற்குப் பின்னரே மிகத் தீவிரம் பெற்றது என்பதை எவராலும் மறுத்துவிட முடியாது.

போர் எனும் அரக்கன் நிறைவுற்றதன் பின்னரான சூழல் போராட்டச் சிந்தனையை மழுங்கடிக்கச் செய்யும் செயற்றிட்டமாய் வடக்கில் போதை விதைப்பு தாராளமாய் நடைபெற்றது என்பதை நாம் இங்கு கூறும் போது சிலருக்குக் கோபம் வரத்தான் செய்யும் அதற்காக உண்மைகளை மறைத்து விட முடியாதே?

போதையின் தாரான தன்மை இன்று வடக்கை குழி தோண்டிப் புதைக்கும் அளவில் விட்டு விட்டது.

இதற்கு யார் பொறுப்பு என்பதைத் தேடுவதிலும் பார்க்க இதற்காக நாம் என்னத்தைச் செய்தோம் என்பதையே முன்நிறுத்திப் பார்க்க வேண்டும்.

போதையின் தாக்கத்தால் எங்கே எம் இனம் அழிந்து விடுமோ என்ற அச்சம் எம் ஒவ்வொருவர்களிடத்தேயும் எழாமல் இருந்தது ஏன் என்பதை நாம் எம்மிடமே கேட்க வேண்டிய கேள்வி.

நாளாந்தம் பத்திரிகைகளைத் திறந்தால் போதையின் விளைவால் மாண்ட உயிர்கள் பற்றிய செய்தி ஒன்றாவது இருக்கவே செய்கிறது.

அதிலும் எம் இளம் சமூகம் தான் இறந்து போகிறது என்பது தான் ஜீரணிக்க முடியாத விடயம்.

வட பகுதியில் பல மதுபான விற்பனை நிலையங்களில் இடப்படும் வாசகம் தான் "நாளை கடை திறக்கப்பட மாட்டாது" எனும் வாசகம்.

ஒரு பல சரக்குக் கடையில் நாளை கடை திறக்கப்படமாட்டாது என எழுதி வைக்கப்பட்டிருக்குமாக இருந்தால் அங்கு பொருள் கொள்வனவு நடக்கும்.

ஒரு வைத்திய நிலையத்தில் அவ்வாறு எழுதி வைக்கப்பட்டிருந்தால் பல நோயாளர்களுக்கு அது உதவியாய் இருக்கும்.

அரச அலுவலகங்களில் இதே வாசகத்தை எழுதி வைத்திருந்தால் அதனால் பொதுமக்கள் வீண் அலைச்சலைத் தடுக்க முடியும்.

ஆனால் இங்கோ மதுபானக் கடைகளில் "நாளை கடை திறக்கப்பட மாட்டாது" என எழுதப்பட்டிருப்பதற்குள் இருக்கும் நோக்கத்தை நினைக்கும் போது அட்டா ஒரு காலத்தில் வீரத்திலும் விவேகத்திலும் மண் பற்றிலும் இனப்பற்றிலும் எவ்வாறு இருந்த தமிழினம் இன்று இவ்வாறு மாறிவிட்டதே என்று மனவேதனையைத் தருகிறது.

இறைவா போதும் உன் படைப்பு இத்துடன் இனப் பரம்பலை நிறுத்தி விடு என்று அவனிடம் மன்றாடுவதை விட வேறு எதைச் செய்துவிட முடியும்?

இந்திரபுத்திரன்

## வன்முறைக் காடான பிரான்ஸ்!





வன்முறைக் காடாக மாறியிருக்கிறது பிரான்ஸ். அங்கே கடந்த ஒரு வாரமாக பள்ளிகள், பேருந்துகள், வணிகக் கட்டடங்கள் தாக்கப்பட்டு வருகின்றன. கலவரத்தைக் கட்டுப்படுத்த 45,000 பொலிஸாரை ரோந்துப் பணியில் இறக்கியிருக்கிறது பிரான்ஸ் அரசு. வன்முறையில் ஈடுபட்டதாக 2,500 இற்கும் மேற்பட்டோர் கைதும் செய்யப்பட்டிருக்கின்றனர். என்ன நடக்கிறது அங்கே?

பிரான்ஸ் நாட்டில் குடிபெயர்ந்து வாழும் அல்ஜீரியரான 17 வயதான நஹெல், டெலிவரி பாயாக வேலை செய்து வந்தவர். தலைநகர் பாரிஸின் புறநகர்ப் பகுதியான நான்டெரில் வசித்து வந்த அவர், 'நான்டெர் ரக்பி கிளப்'பில் இணைந்து விளையாடி வந்தார். சிறப்பான ஆட்டம் காரணமாக அந்தப் பகுதி மக்கள் அவருக்கு ரசிகர்களாக இருந்திருக்கின்றனர். சென்ற வாரம் நான்டெரில் உயர்ரக கார் ஒன்றை வேகமாக ஓட்டி வந்தார் நஹெல். போக்குவரத்து பொலிஸார் தடுத்தும் நிற்காததால் அவர்கள் அவரைச் சுட்டுக் கொன்றதுதான் பிரச்சினையின் தொடக்கப்புள்ளி.

முதலில், "ஆவணங்களைச் சரிபார்க்க காரை நிறுத்தச் சொல்லியும் அந்தச் சிறுவன் நிற்காமல் எங்கள் மீது இடிக்கும் நோக்கில் வேகமாக வந்தான். எங்களைக் காப்பாற்றிக் கொள்ளவே துப்பாக்கியில் சுட்டோம். துரதிர்ஷ்டவசமாகச் சிறுவன் உயிரிழந்துவிட்டான்' என பொலிஸ் அதிகாரிகள் விளக்கம் கொடுத்திருந்தனர். ஆனால், சிசிடிவி காட்சிகளில், நஹெலைத் துப்பாக்கி முனையில் ஓர் அதிகாரி மிரட்டுவதும் பின்னர் அவனைத் துப்பாக்கியால் சுடுவதும் பதிவாகியிருக்கின்றன. இந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வெளியான பிறகு பிரான்ஸ் முழுவதும் போராட்டம் தொடங்கி, பல இடங்களில் வன்முறையாக மாறியிருக்கிறது.

நஹெலின் தாய் மோனியா, "கிளம்பும்போது 'ஐ லவ் யூ' அம்மா என்று சொல்லி விட்டுச் சென்றான். அடுத்த ஒரு மணி நேரத்தில் அவன் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தகவல் வந்தது. எனக்கு இருந்தது ஒரே மகன்தான். என் வாழ்க்கையே அவன்தான்" எனக் கதறியது காண்போரை கலங்கச் செய்தது. 'நஹெல், ஆபிரிக்க நாடான அல்ஜீரியாவைச் சேர்ந்தவர் என்பதால்தான் அவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். இது கறுப்பினத்தவர்கள் மீது நடத்தப்பட்ட வன்முறை' எனச் சமூக ஆர்வலர்கள் கூறி வருகின்றனர்.

இதற்கிடையில், நான்டெரில் நஹெலின் இறுதிச்சடங்குகள் முடிவடைந்து அவர் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார். இதில் கலந்துகொண்ட ஆயிரக்கணக்கான மக்கள் 'நஹெலுக்கு நீதி வேண்டும்' என கோஷம் எழுப்பினர். நஹெலின் பாட்டி நாடியா, "பிரான்ஸில் நடக்கும் வன்முறைகள் எங்கள் குடும்பத்தாரைப் பாதித்திருக்கின்றன. இந்த வன்முறைகளை உடனடியாக நிறுத்த வேண்டும். குறிப்பாக பள்ளிகளும் பேருந்துகளும் தாக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும்" என்று மனிதாபிமானத்தோடு கூறியிருக்கிறார்.

பிரான்ஸின் முக்கிய பகுதிகளில் அரசின் சொத்துகள் தாக்கப்பட்டுவரும் நிலையில், ஹே லெஸ் ரோஸஸ் நகரின் மேயர் வின்சென்ட்டின் வீடும் தாக்கப்பட்டிருக்கிறது. சிலர் இந்தக் கலவரத்தைப் பயன்படுத்தி சுப்பர் மார்க்கெட், ஷாப்பிங் மால்களில், ஷோ ரூம்களில் விலையுயர்ந்த பொருட்களைத் திருடும் வேலைகளையும் செய்து வருகின்றனர்.

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான், "சிறுவன் கொல்லப்பட்டது மன்னிக்க முடியாத குற்றம்தான். அதேநேரம், இதைப் பயன்படுத்தி வன்முறையில் இறங்குவதை ஏற்க முடியாது. அனைவரும் அமைதி காக்க வேண்டும்" என்றிருக்கிறார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கும் பிரான்ஸ் நாட்டின் காவல்துறை சங்கங்கள், "குற்றம் நிரூபிக்கப்படும் வரை ஒருவரைக் குற்றவாளியாகக் கருத முடியாது. ஆனால், நஹெல் விஷயத்தில் அவசரப்பட்டு குறிப்பிட்ட காவல் அதிகாரிக்கு எதிராகப் பேசிவிட்டார் ஜனாதிபதி. நஹெலை அவர்கள் வீட்டில் ஒழுங்காக வளர்க்கவில்லை" என்று கூறியிருக்கிறது. இதையடுத்து, "சிறுவனின் கொலையை நியாயப்படுத்தினால், காவல்துறைக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று பிரான்ஸின் உள்துறை அமைச்சகம் எச்சரித்திருக்கிறது.

நாடே பற்றி எரிந்து கொண்டிருக்கும் நிலையில், பாரிஸில் நடந்த இசை நிகழ்ச்சி ஒன்றில் ஜனாதிபதி மேக்ரான் நடனமாடியதும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதைக்கப்பட்ட கதைகள்

ஆயிரம் கனைகளை மார்பினில் ஏந்திய
தமிழினக் கதைகளை திமிருடன் கூறிட
இனவெறி கொண்ட பேதையர் கூட்டம்
புதைத்தனர் எந்தன் தமிழினப் பெருமையை

தாய்மடி போளுறும் தாய்நிலம் வேண்டிட
தன்னுயிர் கொடுத்து காத்திடும் வீரரை
உன்நிலம் என்நிலம் என்று கூறி
புதைத்ததே உங்கள் இனவெறி தேசம்

உறங்கிடும் பெருமைகள் உலகவர் அறிந்தால்
உயர்ந்திடும் ஈழப் பெருமையை எண்ணி
பழைமையைக் கூறும் யாழ் நில நூலகம்
ஒளிர் ஏற்றப்பட்டது பிரதம அநீதியால்

ஆசிய அதிசய ஆலயத் தேரினை
அழித்தது அன்று இராணுவ பாதம்
அதனைக் கண்ட உலகம் முழுதும்
வேடிக்கை பார்க்குது ஈழத்தை இன்று

கிட்டிப்புல்லு அடித்த சிறார்
சிரம் வெடித்து சிதறிக் கிடக்க
நான்கு தோட்டா நடுமாறில் வாங்கி
சாய்ந்ததே அன்று ஈழநில இளவரசு



ந. விதுஷன், யா/ஹாட்லிக் கல்லூரி.

# விபத்துக்கள்

இடி மின்னல் புயலாய்
வெடி அதிரச் சாவுகள்
ஆட்லறி துளைகளின்
அகோரப் பலிகள்
கண்முன்னே கண்ட காட்சி
கனவாகிப் போக முன்னே
போருக்குள்ளிருந்து
மீண்டெழுந்த எம்மினத்தில்
சாகசத்தின் உச்சத்தால்
சாவுகள்வருவதேன்

வீரம், விஞ்ஞானம் அதற்கு மேல்
வான் புகழ் கொண்ட பண்போடு
வரித்த கொள்கையில்
விசித்திர வரலாறு படைத்தது எம்மினம்

விபத்து வரையறைக்குள்
விழுந்து கிடத்தல் வேண்டாம்
சிரித்து மகிழும் உறவுகளை
சோகத்தில் ஆழ்த்திட வேண்டாம்
இயற்கை மரணங்கள்
எமைத் தாக்கும் காலமதில்
செயற்கைச் சாவுதனை
சேகரிக்கும் கொடுமையிது
கொடுத்த விலை போதும்-தோழனே
கிடைத்த காலம் வாழ்வோம்

சவாரி செய்திடும் சாகசம் நிறுத்து
சிறுவர் முதியோர் வீதியைக் கடப்பர்
பார்வை இழந்தவர் பாதையில் தவிர்ப்பர்
பொறுமையில்லாப் பயணங்கள் தவிர்த்து
பொன்னான உயிர்தனைக் கண்ணாகக் காப்போம்.

சாந்தையூர் வினிஸ், பண்டத்தரிப்பு.



# காலத்தின் பெருநெருப்பு

தொலைதூர மலைகளை
ஏறிக்கடந்து கொண்டிருந்தான்
சூரியன்..
அஸ்தமனத் திருவிழாவின்
அழகை பருகிக் கொண்டிருந்தேன்..
பகலின் வெம்மை மிகுந்த
நினைவூட்டல்களை
தாள்களில் கொட்டி
வியர்வை படிந்த கவிதையொன்றை
எழுதத் தொடங்கினேன்..
உப்புக்கரித்த சொற்களால்
தாள்கள் சற்றே உப்பியிருந்தன..
மெல்ல மெல்ல
இருளின் விரல் பிடித்து
எனைச் சந்திக்க வந்தது
இந்த மாலைப் பொழுது..
பகலில் கடிந்த வெம்மைக்கு
இப்போது தலையை வருடிக் கொடுத்தது
கவிதையின் உவர்ப்பை
தாங்காத தென்றல்..
அந்திக் காற்று
அள்ளி வந்த சொற்களின்
மகரந்த வாசனை
மணக்கும் சோலையாய்
உட்கார்ந்து கொண்டது கவிதையில்..
ஒரு கோப்பைத் தேநீருடன்
ஒரு அணைப்புமாய்
வழியனுப்பி வைத்தேன்
அந்தி மாலையை..
சங்கரி சிவகணேசன்.

சங்கரி சிவகணேசன்.



## மௌனத்தின் தேடல்- 676



# மாயக் கண்ணன்

பாற்கடலில் வந்துதித்த பச்சை
மாமணி போல்
அன்றலர்ந்த செந்தாமரையாய் மலர்ந்த
மதிவதனத்தில்
தனங்களைக் கொள்ளும் மாயப்
புன்னகை பூக்கும் மாயவனே -இவ்
அவனியில் அவதரித்த ஆவிலைக் கண்ணன்
நீ தானோ.

சி.மகாலட்சுமி, கொக்குவில்.

## மௌனத்தின் தேடல்- 677



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

# தாய்மை ஏன்?

புத்தம் புதிய மலராய்
ஜனனித்த அழகு நிலவை
தாய்மையற்ற தாய் ஒருத்தி
குப்பைக்கூடைக்குள்
அநாதையாக்கி விட்டாள்
என்பதையறியாது
வஞ்சகமற்ற புன்னகையால்
வசீகரிக்கின்றது
பூந்தளிரொன்று.
சி.இ.அன்புதுரை,
சம்மட்டியோலை, மானிப்பாய்.

# ஆதரவு

பாலூட்ட யாருமில்லை என்று
பாலனவன் ஏங்க முன்பே
பரிவு காட்ட நானிருக்கின்றேன் என
பாலகனை அரவணைக்கும்
பண்புள்ளம் கொண்டோரின்
பொன்னான கைகளுக்கு
பாலனவன் சார்பிலே நான்
தலைவணங்கி நிற்கின்றேன்.

இ.இளமதி,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

# தெய்வ தரிசனம்

பிறப்புத் தொடங்கி
விருத்தெரியும்
காலம் வரையும்
பராமரிப்பும்
பாதுகாப்பும்
காத்திரமானவை
இதில் மழலைப் பருவம்
அதி சிரத்தையில்
புன்சிரிப்புடன் சேர்ந்த
கண்சிமிட்டல்
காணக் கிடைக்கா
கவலை போக்கும்
தெய்வ தரிசனம்.
க.நாகராசா, நுணாவில்.

# அழகி

வட்ட நிலா முக அழகி
ஐயிர மீன் கண்ணழகி
முத்துமுத்துப் பல் அழகி
கன்னக்குழி அழகி
கள்ளமில்லா சிரிப்பழகி
மழலை மொழி அழகி
தாயின் கருவில் வளர்ந்தழகி
தந்தையின் உள்ளம் நிறைந்தழகி
புதிய உறவாய் வந்த அழகி
கடவுள் தந்த கொடை அழகி

கும்பவாழியான், உடுப்பிட்டி.

# மழலையின் மாண்பு

மழலையின் சிரிப்பில் மகிழ்ந்திடுவோம்
மழலை இல்லையேல் தாய்மையின் சிறப்புக்கு வழியேது
தாயன்பு சேயினை மடியில் தாங்கும் போது
தெவிட்டாத இன்பத்தைத் தரும்
தாயும் சேயும் தன்னலமற்ற ஜீவன்கள்.

ஆ.செல்வி,
திருநாவலூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(உ-2061)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

357

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## உள்ளது ஓர் ஈரல்



என்னுள்ளே இயங்கும்
24 மணி நேர
இரசாயன கூடம்.
சங்கொலிக்கு காத்திராது
சாத்தாமல் வேலை செய்யும்
சத்தமில்லாத் தொழிற்சாலை.

உணவுக் கால்வாய் வழி
உள் வருவனவற்றிற்கு
உறுதிப் பத்திரம் வழங்கும்
உடலின் சுங்கத் துறைமுகம்.

நீ உள்ளே இருந்து
உரைத்தெடுப்பாய் என்று
நம்பித் தானே
நாக்கு விரும்பியதை எல்லாம்
நலமென்று அனுப்புகிறது.
வடித்து வருவதைப்
பிடித்துக் கணக்கெடுத்து
பொறுப்பு நீ எடுத்து
பொருத்தமாய்த் தருவதால்
குருதிச் சமநிலை
குழம்பாமல் உள்ளது

குளுக்கோசு கொழுப்பமிலம்
குலைந்து போன செங்கலங்கள்
cholesterol குடித்ததென்று நீ
கூறு போடுவது ஏராளம்.
அடுக்கி எழுதி வைத்தால்
ஆயிரம் தொழில் என்று
ஐயமறச் சொல்கின்றார் - நீயோ
அடக்கமாய் இருக்கின்றாய்.

நித்தம் நித்தம் பித்தம்
வடித்தலே - உன்
முற்றத்து நிகழ்வென்று
முத்திரை குத்தி விட்டு,
மாத்திரை தொடக்கம்
மத்தும் மது வரைக்கும்
மடை திறந்து விடுகிறோம் - நீயோ
தடைகள் தகர்த்துன்
படைகள் நகர்த்தி
குடையாய் நின்று
குலம் வாழ வைக்கிறாய்

நீ போடும் புரதப்
பிச்சையினால் தானே
குழாய்களில் குருதி
குடியிருப்புச் செய்கிறது - அது
ஓடுவதும் உறைவதும் - உன்
புரதப் பணியின் பிரதிபலிப்புத் தானே

ஆக்குவாய், காப்பாய், அழிப்பதால்
மற்ற அங்கங்கட்கு அருள் தருவாய்.
போக்குவாய் - புதிதாய்ப் பிறப்பிப்பாய்.
தாக்குவாய், தரம் குறைப்பாய்.
ஊற்று வாய் வந்த உணவை
உய்விப்பாய்.
மாற்றுவாய், மறு நாளைக்காய்த்
தேற்றுவாய்.
ஆயிரம் தொழில் செய்தாலும்
அடக்கம் காக்கும்
அங்கப் பெரும் பொறையே,
ஆகத்தின் நிதி நிறையே,
இதயத்தைப் போலுன்னை
உயரத்தில் வைத்ததில்லை
காவியத்தில் கதை பேச
காதலர்கள் அழைத்ததில்லை.
முழக்கங்கள் போட்டு நீ
மூளை என்று சொன்னதில்லை
முடிவுகள் எடுத்ததற்காய்
முரசுகள் கொட்டவில்லை
மூச்சு அதை விட்டால்
முடிவு தான் என்று நீ
மூசிக் காட்டவில்லை.
சலமாய் வடித்ததில்லை
சத்தங்கள் போட்டதில்லை
கல்லாய் நீ கிடந்ததாலோ
கல்லீரல் என்றார்கள்.

நல்லாய்த்தான் சொன்னார்கள்.
நாயம் இருந்தாலும்
கல் என்று உன்னை நினைத்து
காயப்படுத்துமிந்த
பொல்லாப்பை விட நாமும்
பொறுப்பெடுத்தால் என்ன?

அளவோடு மது என்று
அடக்கமது கொள்ள
இணக்கமது இல்லையென்றால்
தொடக்கமது வேண்டாம் - அது தரும்
தொந்தரவும் வேண்டாம்.
மருத்துவர் சொன்னதே
மருந்தாய் எடுத்து,அருந்தும் போது
அளவுகள் பார்த்து,
பக்க விளைவுகளின் பட்டியல் தேடி,
ஒட்டுமா என்று ஒரு முறை பார்த்து,
புட்டிகள் குட்டிகள் எட்டா வண்ணம்
திட்டியில் பெட்டியைப்பூட்டியே
வைப்போம்.
வரிசை கட்டும் வைரசு வந்து
தரிசு தான் என்று
தான் ஆட்டம் போடும்
பரிசினைத் தவிர்க்கும்
பரிசுகள் அறிவோம்.
பார்த்து நடப்போம்.
கைகளைக் கழுவி
கற்பு நிலை பேணி
ஊசிகள் இன்றி
உன்னதம் தேடும்
ஓர் நிலை காணும்
ஊரினை வளர்ப்போம்.

எல்லா இடத்திலும்
எளிதாய்ப் புகுந்து
கொல்லும் வழிகள்
சொல்லும் கொழுப்பு
கல்லீரலோடும் கதை எழுதக் கூடும்.

தொடர் கதை முடிக்கத்
தொடர்ந்து போராட வேண்டும்.
வாயாட்டும் வழக்கை
வசப்படுத்த வேண்டும்.
ஓயாத உடற்பயிற்சி
ஒழுங்காக வேண்டும்.
உயரத்திற்கு மட்டுமே
உள்ள நிறை வேண்டும்.
உடலோடும் கொழுப்பின்
உண்மை நிலை காணவேண்டும்.
உணவிலே கவனம்
ஊறிடல் வேண்டும்.
உள்ளது ஒரு ஈரல்,
உயிர் வாழ உறுதியாய் - அது
ஊடாட வேண்டும்.

Dr.சிவாணி பத்மராஜா.
MD. USA

## சந்தேகங்களுக்கான பதில்கள்

**எனது வயது 51, ஒன்பது மாதங்களுக்கு முன் RBS செய்த போது 209mg / dl ஆக இருந்தது. HbA1C டெஸ்ட் 7.7 ஆக இருந்தது. அன்றிலிருந்து சுமார் 6 மாதங்கள் நான் கடுமையான உடற்பயிற்சி செய்து வந்தேன். ஒவ்வொரு கிழமையும் இரத்தப் பரிசோதனை செய்து வந்தேன். FBS சராசரியாக 121 இல் இருந்தது. மீண்டும் HbA1C டெஸ்ட் செய்த போது 6.7 ஆக இருந்தது. எனது தற்போதைய உடல் நிறை 60kg, உயரம் 170cm. எனக்கு உண்மையில் சலரோக நோய் இருக்கிறதா? எனக்கு இது சம்பந்தமான வைத்திய ஆலோசனை தருவீர்களா?**

முதலில் உங்களுடைய நிலை சலரோக நிலையா அல்லது சலரோகத்திற்கு முந்திய நிலையா எனப் பார்ப்போம். சலரோகத்திற்கு முந்திய நிலையின் போது சாப்பாட்டிற்கு முன்னராக குருதிக் குளுக்கோசின் அளவு 100mg/dl - 125mg/dl இற்கும் இடையிலும் HbA1C ஆனது 5.7-6.4 இற்கும் இடையிலும் இருக்கும். HbA1c ஆனது 6.5 இற்கு மேற்பட்டிருப்பின் சலரோக நோய் உள்ளதாக கொள்ளப்படும். உங்களிற்கு சலரோக நோய் உள்ளது. Metformin என்ற மாத்திரை தொடங்க வேண்டும். உங்களுடைய தற்போதைய உடற்திணிவுச் சுட்டியானது 22.49 ஆக உள்ளது. ஒருவருடைய உடற்திணிவுச்சுட்டியானது 18.5 - 23 எனும் அளவினுள் இருக்கலாம். எனவே உங்களுடைய நிறை சாதரண அளவிலேயே உள்ளது.

எனவே நீங்கள் வேகமான நடை, ஓடுதல், மிதிவண்டி செலுத்துதல், நீந்துதல் போன்ற காற்றுப் பயிற்சியினை நாளொன்றிற்கு 30 நிமிடங்கள் செய்வது சிறந்தது. அத்துடன் உணவுக் கட்டுப்பாட்டினைக் கடைப்பிடிப்பதன் மூலம் உங்களின் ஆரோக்கியத்தைப் பேண முடியும்.

நித்திலம்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் சுகாதார துறையில் உள்ள பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்

## சாகல ரத்நாயக்க

(கொழும்பு)

சுகாதாரத் துறையில் நிலவும் பிரச்சினைகளுக்கு விரைவாகத் தீர்வு காணும் நோக்கில், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க தலைமையில் நேற்று முன்தினம் விசேட கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் பற்றாக்குறை, மருந்துகளின் தரம் மற்றும் கொள்வனவு செயற்பாட்டில் உள்ள சவால்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

நாட்டின் சுகாதாரத் துறைக்குள் அவசர கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய சாகல ரத்நாயக்க, நெருக்கடிகள் தொடர்பான ஊடக அறிக்கைகளின் உண்மையை ஆராயுமாறும் அறிவுறுத்தினார்.

இந்த குற்றச்சாட்டுகளில் ஏதேனும் உண்மை என கண்டறியப்பட்டால், பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உதவ உடனடியாக தலையிட்டு நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.



சுகாதார அமைச்சின் அலட்சியப்போக்கு நோயாளர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தினால் அதனை மன்னிக்க முடியாது என்றும் சாகல ரத்நாயக்க தெரிவித்தார். (4)

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்

# இதுவரை இழப்பீடு வழங்காத மைத்திரி

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு பத்து கோடி ரூபா நட்டஈடு வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்ட போதிலும் இன்று வரை நட்டஈடு வழங்கப்படவில்லை என தகவல் வெளியாகியுள்ளது.



பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான 7 பேர் கொண்ட உச்சநீதிமன்ற நீதிபதிகள் குழாம் ஜனவரி 12 ஆம் திகதி ஏகமனதாக இந்த தீர்மானம் மேற்கொண்டதுடன், உரிய இழப்பீட்டை ஆறு மாதங்களுக்குள் வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உத்தரவிட்டது.

இதன்படி, எதிர்வரும் 12 ஆம் திகதியுடன் ஆறு மாத காலம் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# மதுபான நிறுவனங்களுக்கு இரு வார கால அவகாசம்

(கொழும்பு)

நாட்டில் இதுவரை வரி செலுத்தாத மதுபான நிறுவனங்களுக்கு வரி செலுத்துமாறு கோரி கலால் திணைக்களம் 2 வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கலால் திணைக்களத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (4)

# கட்டுமானப் பொருட்களின் விலைகளை குறையுங்கள்

## கட்டுமான சங்கங்கள் கோரிக்கை

(கொழும்பு)

சீமெந்து விலை குறைப்பை ஒப்பிடும் போது கம்பி, பெயின்ட் உள்ளிட்ட இதர கட்டுமானப் பொருட்களின் விலையை குறைக்குமாறு கட்டுமான தொழிற் சங்கங்கள் அரசிடம் கோரிக்கை முன்வைத்துள்ளன.

2600 ரூபாவாக இருந்த சீமெந்து மூடை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலையை நேற்று முதல் 300 ரூபாவினால் குறைக்க சீமெந்து உற்பத்தியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், சீமெந்து விலை குறைக்கப்பட்டுள்ளதைப் போன்று ஏனைய கட்டுமானப் பொருட்களின் விலையையும் குறைக்குமாறு தேசிய நிர்மாண சங்கத்தின் செயலாளர் சுபுன் அபேசேகர தெரிவித்தார். (4)

# கொழும்பில் அதிகரிக்கும் டெங்கு நோயாளிகள்

(கொழும்பு)

நாட்டில் குறிப்பாக கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு நோயாளர்கள் அதிகரித்து வருவதாக கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் பருவ மழை ஆரம்பமாக வுள்ள நிலையில் இந்த நிலைமை உருவாகும் அபாயம் காணப்படுவதாக அதன் பிரதம வைத்திய அதிகாரி ருவன் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இவ்வருடத்தில் 2,138 டெங்கு சந்தேக நபர்கள் பதிவாகியுள்ளதாகவும் அதிகளவான டெங்கு நோயாளர்கள் குருந்துவத்தை பிரதேசத்தில் பதிவாகியுள்ளதாகவும் வைத்தியர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக கொழும்பு நகரில் அதிகளவான கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. கொழும்பில் டெங்கு நோய் பரவல் ஓரளவு கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.. ஆனால் அடுத்த 2 வாரங்கள் மிக முக்கியமானது என வைத்தியர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண் மகிழ 22 . 12 . 1932

கண் நெகிழ 21 . 06 . 2022

அமரர்.

மீனாட்சி சண்முகம்

(அமரர் ஓய்வுநிலை பொலிஸ் உத்தியோகத்தர் அவர்களின் அன்பு மனைவி)

திதி: 09.07.2023

அன்புக்கு இலக்கணம் தந்த தெய்வமே அம்மா!
உங்கள் பாசமுகம் காணத் துடிக்கின்றோம்.
எங்கள் வாழ்வின் வரலாற்று பொக்கிசமே!
தன் மெய் வருத்தி எம் மேன்மைக்காய் வாழ்ந்தவரே.
உங்கள் ஆத்மா இறைவன் திருவடியில்
அமைதி கொள்ளப் பிரார்த்திக்கின்றோம்.

இல. 36 D10, இந்திரபுரம்.

குடும்பத்தினர்.

(c-6662)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் நீண்டகாலம் சேவையாற்றிய (முன்னாள் ஆசிரியை) திருமதி. தயாநிதி தர்மரத்தினம் அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர். சின்னையா தில்லையம்பலம்



அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(16228)

ஆசிரியையுடன் இணைந்து சேவையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### 120 நாடுகள் தடை செய்த

# கொத்துக் குண்டுகளை உக்ரைனுக்கு வழங்க அமெரிக்கா தீர்மானம்

(வோஷிங்டன்)

**உக்ரைனிற்கு கொத்துக்குண்டுகளை வழங்குவது என்ற அமெரிக்காவின் முடிவை ஜனாதிபதி ஜோ பைடன் நியாயப்படுத்தியுள்ளார்.**



கொத்துக்குண்டுகளை வழங்குவதா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்கு நீண்டகாலம் எடுத்தது என அவர் தெரிவித்துள்ளார்.

உக்ரைனிடம் வெடிபொருட்கள் முடிவடைவதன் காரணமாகவே இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருத்தமான தருணத்தில் எடுக்கப்பட்ட முடிவு என உக்ரைன் தலைவர்கள் இதனை வரவேற்றுள்ள அதே வேளை மொஸ்கோ இதனை சாடியுள்ளது.

உலகின் 120 நாடுகள் கொத்துக்குண்டுகளை தடை செய்துள்ளன.

அடுத்தவாரம் நேட்டோவின் உச்சிமாநாடு இடம்பெறவுள்ள நிலையில் அமெரிக்காவின் நேசநாடுகளிற்கு இந்த விடயத்தை தெரியப்படுத்தியுள்ளதாக பைடன் தெரிவித்துள்ளார்.

கொத்துக்குண்டுகள் பொதுமக்களிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என நாங்கள் உணர்ந்திருந்ததால் உக்ரைனிற்கு அவற்றை வழங்கும் நடவடிக்கைகளை நீண்டகாலமாக தவிர்த்து வந்தோம் என தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜக்சுலிவன் தெரிவித்துள்ளார்.

உக்ரைனிடம் ஆட்டிலறிகள் இல்லாத நிலை உருவாகின்றது. அமெரிக்கா உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும் அதேவேளை விநியோகங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் எந்த நிலையிலும் உக்ரைனை பாதுகாப்பற்ற நிலையில் விடமாட்டோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொத்துக்குண்டுகள் நீண்டகாலம் வெடிக்காமல் மண்ணில் புதையுண்டு இருக்ககூடியவை என்பதால் சர்ச்சைகள் காணப்படுகின்றன. (4)

# ரஷ்யா-உக்ரைன் இடையே போர் கைதிகள் பரிமாற்றம்



(ஜெனீவா)

ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகளிடையே போர் கைதிகள் பரிமாற்றம் இடம்பெற்றுள்ள நிலையில் இரு தரப்பில் இருந்தும் சுமார் 45 கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

உக்ரைன் - ரஷ்யா போர் தொடக்கி 17 மாதங்களை கடந்துள்ள சூழலில் இரு நாடுகளும் இடையிடையே கைதிகளை பரிமாறி வருகின்றன.

அந்த அடிப்படையில், கடந்த வியாழக்கிழமை அன்று விடுவிக்கப்பட்டுள்ள இரு நாட்டு வீரர்களும் மகிழ்ச்சியுடன் சொந்த ஊர்களிற்கு திரும்பியுள்ளனர்.

இந்நிலையில், இதுவரை ரஷ்யப் படைகளால் சிறைபிடிக்கப்பட்ட 2,576 உக்ரைனியர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி அலுவலக அதிகாரி தெரிவித்துள்ளார். (4)

# நெதர்லாந்து பிரதமர் திடீர் இராஜினாமா



(அம்ஸ்டர்ரால்)

நெதர்லாந்து பிரதமர் மார்க் ரூட் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். நெதர்லாந்தில் கூட்டணி ஆட்சி நடைபெற்று வரும் நிலையில் நெதர்லாந்து பாராளுமன்றத்தில் புலம்பெயர்ந்தோர் தொடர்பான மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மசோதா தொடர்பாக கூட்டணிக் கட்சிகளுக்குள் ஆதரவும் எதிர்ப்பும் மாறி மாறி நிலவி வந்தது.

இதனால் மார்க் ரூட் பிரதமராகத் தொடர்வதிலும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதிலும் தொடர்ந்து குழப்பம் நிலவி வந்துள்ளது.

குறித்த மசோதா தொடர்பான விவகாரத்தில் கூட்டணிக் கட்சிகளுக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன.

அதனைத் தொடர்ந்து நெதர்லாந்து பிரதமராக மார்க் ரூட் தனது பதவியைத் தொடருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து கூட்டணிக் கட்சிகளிடம் இருந்து அழுத்தங்கள் அதிகரித்துக் கொண்டே இருந்துள்ளன.

இதனால் மார்க் ரூட் நேற்று தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்தார். (4)

# 2500 கிலோ எடை கொண்ட உலகின் மிகப்பெரிய சாக்லேட் பாக்ஸ்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் ரஸ்ஸல் ஸ்டோவர் என்கிற பிராண்ட் நிறுவனம் ஒன்று 2500 கிலோவுக்கு மேல் எடை கொண்ட உலகின் மிகப் பெரிய சாக்லேட் பெட்டியை தயாரித்துள்ளது,



சாக்லேட் பிரியர்களின் கற்பனையாக இருக்கக்கூடிய ஒரு பொருளை சாக்லேட் தயாரிப்பாளர் ஒருவர் உலக சாதனையாக படைத்துள்ளார். கின்னஸ் உலக சாதனைபடி, 2,547.50 கிலோ எடையுள்ள பிரம்மாண்டமான சாக்லேட் நிரப்பப்பட்ட பெட்டியுடன், ரஸ்ஸல் ஸ்டோவர் என்ற அமெரிக்க நிறுவனம் சாதனையை முறியடித்தது.

இந்த சாக்லேட் பெட்டிக்குள் கேரமல், தேங்காய் கொத்து, பழம் மற்றும் நட்ஸ் கேரமல், வேர்க்கடலை கொத்து, பெக்கன் டிலைட், ராஸ்பெர்ரி கிரீம், ஸ்ட்ராபெரி கிரீம், டோஃபி மற்றும் ட்ரஃபுல், அத்துடன் சாக்லேட் மூடப்பட்ட பாதாம் ஆகியவற்றின் பெரும் பகுதியும் ஒன்பது வெவ்வேறு சாக்லேட் சுவைகளால் நிரப்பப்பட்டது. (4)

# உலகின் பணக்கார யாசகர் இந்தியாவில் அடையாளம்

### சொத்து மதிப்பு 7.5 கோடி

(டில்லி)

உலகின் பெரும் நிதி மற்றும் சொத்துக்களுடன் வாழும் செல்வந்த யாசகரான இவர் இந்தியாவின் மும்பாய் நகரில் இனங் காணப்பட்டுள்ளார்.

மும்பையைச் சேர்ந்த பாரத் ஜெயின் என்பவர் உலகின் பணக்கார யாசகர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த யாசகரின் சொத்து மதிப்பு 7.5 கோடி இந்திய ரூபாய் எனவும் மாத வருமானம் இந்திய மதிப்பில் 60.000 முதல் 75.000 ரூபாய் வரை என்றும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவருக்கு 1.2 கோடி ரூபாய் பெறுமதியான அடுக்குமாடி குடியிருப்பும் மாதாந்தம் 30000 இந்திய ரூபாய் வாடகை பெறும் அளவில் இரண்டு வர்த்தக நிலையங்களும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (4)

# ரஷ்ய தொழிற்சாலையில் பயங்கர வெடி விபத்து

### ஆறு பேர் பலி

(மொஸ்கோ)

ரஷ்யாவின் மத்திய பகுதியான சமாராவில் வெடி பொருள் தொழிற்சாலை இயங்கி வருகிறது. இங்கு திடீரென ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி 6 பேர் உயிரிழந்தனர். இருவர் படுகாயமடைந்துள்ளனர.

இதேபோல் கடந்த மாதம், மொஸ்கோவின் தென்கிழக்கில் உள்ள டாம்போவ் பகுதியில் உள்ள துப்பாக்கித் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் நான்கு பேர் இறந்தனர். சப்பாயிவெஸ்க் நகரில் உள்ள புராமின்தெஸ் ஆலையில் இந்த வெடி விபத்து ஏற்பட்டது. இதில், எட்டு பேர் காயமடைந்தனர். அவர்களில் ஆறு பேர் இறந்தனர்.

பழுது பார்க்கும் பணியின் போது உபகரணங்கள் அகற்றப்பட்டதன் விளைவாக வெடி விபத்து நிகழ்ந்ததாக கூறப்படுகிறது.

உக்ரைனில் தாக்குதல் தொடங்கியதில் இருந்து பல தொழிற்சாலைகள் ரஷ்யாவில் முழு வேகத்தில் இயங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நூல்நிலைய கதவு திறக்கும் போது ஒரு சிறைச்சாலை கதவு மூடப்படுகிறது.

~ விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பாடசாலைகளை மூடுவதற்கு காரணமானவர்கள் யார்?

நாட்டில் 50 வீதமான பாடசாலைகளை மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறியுள்ளார்.

இவ்வாறு கூறியதற்காக கல்வி அமைச்சர் வெட்கப்பட வேண்டும்.

உண்மையில் பாடசாலைகளை மூடவேண்டிய சூழ்நிலை என்பது மாணவர்கள் இன்மையால் ஏற்பட்டுள்ளதாகும்.

அதாவது பிரபலமான பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகளைச் சேர்க்க வேண்டுமென்ற மோகத்தின் காரணமாக, உள்ளூர்ப் பாடசாலைகள் மாணவர் இன்றி வெறிச்சோடிக் கிடக்கின்றன.

பிரபலமான பாடசாலைகளில் மட்டும் தங்கள் பிள்ளைகளைச் சேர்ப்பதில் பெற்றோர்கள் அக்கறை கொண்டுள்ளனர் என்ற நிலைமையானது எங்ஙனம் ஏற்பட்டதென்பது பற்றி இங்கு சிந்திப்பது அவசியமாகும்.

ஆம், அனைத்து அரசாங்கப் பாடசாலைகளும் அரச பாடத்திட்டத்தின் பிரகாரம் செயலாற்றுகின்றபோதிலும் குறித்த சில பாடசாலைகளை மட்டும் மையப்படுத்தி வள ஒதுக்கீடுகளைச் செய்யும்போது, ஏனைய பாடசாலைகள் பின்னடைவைச் சந்திக்கின்றன.

குறிப்பாக போக்குவரத்து வசதிகள் குறைந்த மற்றும் தூர இடங்களில் உள்ள பாடசாலைகளுக்கு ஆசிரிய வள ஒதுக்கீட்டைச் செய்வதில் இன்னமும் சரியானதொரு பொறிமுறையை கல்வி அமைச்சு உருவாக்கவில்லை.

இதன் காரணமாக கஷ்டப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள் இன்னமும் போதிய ஆசிரியர்கள் இன்றி இயங்குகின்ற துர்ப்பாக்கிய நிலையில் உள்ளன.

இவ்வாறு உரிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால், அந்தப் பாடசாலைகளின் கல்வி அடைவு மட்டம் மிகவும் வீழ்ச்சி நிலையையே காட்டுகின்றன.

இவ்வாறான சூழ்நிலையில்தான் பிரபலமான பாடசாலைகளில் பிள்ளைகளைப் படிக்க வைத்தல் என்ற சிந்தனை பெற்றோர்களிடம் எழுகிறது.

தவிர, இத்தகைய நிலைமையானது குறித்த கஷ்டப் பிரதேசத்தில் இருக்கின்ற மக்களை அங்கிருந்து இடம்பெயர வைக்கின்ற சூழமையையும் தோற்றுவிக்கிறது.

இதுதவிர, பிரபலமான பாடசாலைகளில் மாணவர்கள் குவிந்து கிடக்கின்றனர்.

அதாவது பிரபலமான பாடசாலைகளில் மாணவர்களின் அனுமதி வரையறுக்கப்படாமல் இருக்கும்போது, ஏனைய பாடசாலைகள் மாணவர் இன்றி வெறிச்சோடிக் கிடக்கவே செய்யும்.

இங்குதான் பிரபலமான பாடசாலைகளுக்கு எங்ஙனம் மாணவர் அனுமதி குவிகிறது என்று ஆராய வேண்டிய தேவை ஏற்படுகிறது.

அவ்வாறானதோர் ஆய்வுசெய்யப்படுமாயின், பிரபலமான பாடசாலைகளில் சமாந்தர வகுப்புக்களின் எண்ணிக்கைகளை அதிகரிப்பதற்கான அனுமதிகளைக் கொடுக்கின்றவர்களும் குறித்த மாணவரை குறித்த பிரபலமான பாடசாலையில் அனுமதிக்குமாறு கடிதம் கொடுப்பவர்களும் கல்வி அதிகாரிகளாகவும் அரசியல்வாதிகளாகவும் இருக்கின்றனர் என்பதைக் கண்டு கொள்ள முடியும்.

ஆக, எல்லா பாடசாலைகளையும் செம்மையாக இயங்க வைக்க வேண்டிய கல்வி நிர்வாகம் பிரபலமான பாடசாலைகளை மட்டும் இலக்கு வைத்து காரியமாற்ற, ஏனைய பாடசாலைகள் மாணவர் இன்றி மூடுவிழாக் காணுகின்றன.

இதுவே உண்மை. இந்த உண்மையை உணர்ந்தேனும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டால், அனைத்துப் பாடசாலைகளிலும் அளவான மாணவர் தொகை பேணப்படுவதுடன் கற்றல் செயற்பாடும் உச்சமடைந்து ஒட்டுமொத்தத்தில் கல்வி அடைவு மட்டமும் உயர்வடையும் என்பது சத்தியமான உண்மை.

## மனித புதைகுழி விவகாரத்தில் சர்வதேச ஒத்துழைப்பு வேண்டும்

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(கொழும்பு)

மனிதப் புதைகுழிகள் தோண்டப்படும்போது வெளிநாட்டு நிபுணர்களின் ஒத்துழைப்பு பெறப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பாதுகாக்க வேண்டும் முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயிலிருந்து பல மனித எச்சங்கள் தற்போதுமீட்கப்பட்டுள்ள நிலையில் அதில் தமது உறவுகளும் இருக்கலாமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

சர்வதேச விதி முறைகளை கடைபிடித்து வெளிநாட்டு நிபுணர்கள் தடயவியலாளர்கள் ஆகியோரின் உதவிகளையும் பெற வேண்டும். கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விடயத்தில் நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்த பொலிஸார் தயக்கம் காட்டியுள்ளனர்.

இதேநேரம்மனித புதைகுழி தொடர்பில் விடுதலை புலிகள் மீது குற்றம் சாட்டப்பட்டால் அதற்காக கருணா அம்மான் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். (ம-7)

## பெரமுனவின் உறுப்பினரே ஜனாதிபதி வேட்பாளர்

### சாகர காரியவசம்

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்போம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் என்பது ஆளும் தரப்பு உறுப்பினர்களின் தனிப்பட்ட நிலைப்பாடே தவிர கட்சியின் நிலைப்பாடல்ல என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண்பதற்காகவே ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம். அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு கட்சி என்ற ரீதியில் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினோம்.

ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவதால் எமது கட்சியின் அடிப்படை கொள்கைகளை விட்டுக்கொடுக்க முடியாது. கட்சி என்ற ரீதியில் முன்னேற்றமடையும் நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டுள்ளோம்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை அமைச்சரவைக்குள் இருந்தவர்களே பலவீனப்படுத்தினார்கள்.

அரசியல் நெருக்கடிகளை ஏற்படுத்தி அதனூடாக ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் வகையில் அருகில் இருந்தவர்கள் வகுத்த சூழ்ச்சியை நாங்கள் தோற்கடித்தோம்.

பொதுஜன பெரமுனவில் இருந்து சந்தர்ப்பவாதிகள் வெளியேறியுள்ளார்கள். கட்சியை முழுமையாக மறுசீரமைத்துள்ளோம். நாடளாவிய ரீதியில் மக்கள் கூட்டத்தை நடத்தி வருகிறோம். மக்கள் ஆதரவுடன் மீண்டும் வலுப்பெறுவோம்.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஒருவரையே ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்போம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எமது ஜனாதிபதி வேட்பாளர் என ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிடுவது அவர்களின் தனிப்பட்ட நிலைப்பாடே தவிர கட்சியின் உத்தியோகபூர்வ தீர்மானம் அல்ல.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியானதும் வேட்பாளரை அறிவிப்போம் என்றார். (ம-7)

### இலங்கை–அவுஸ்திரேலியா

## இரு தரப்பு பேச்சுவார்த்தை அடுத்த வாரம் ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கைக்கும்அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான வெளிவிவகார அலுவலகத்தின் நான்காவது சுற்று இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் இரண்டாவது கூட்டிப்பிராந்திய மாநாடு மற்றும் மூன்றாவது வர்த்தக மற்றும் முதலீட்டு கூட்டு ஆணைக்குழுக் கூட்டம் என்பன அடுத்த வாரம் நடைபெறவுள்ளன.

இப்பேச்சுவார்த்தை மற்றும் கூட்டம் என்பன எதிர்வரும் செவ்வாய்க்கிழமையும் புதன்கிழமையும் கொழும்பில் அமைந்துள்ள வெளிவிவகார அமைச்சில் நடைபெறவுள்ளன.

இதற்கு அவுஸ்திரேலிய வெளிவிவகார மற்றும் வர்த்தகத் திணைக்களத்தின் உதவிச்செயலர் ஹரி கோவான், வெளிவிவகார அமைச்சின்மேலதிக செயலர் யசோஜா குணசேகர மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான மேலதிக செயலாளர் ஷனிகா திஸாநாயக்க, வர்த்தகம்மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஏ.எம்.பி.எம்.பி அத்தபத்து ஆகியோர் தலைமைதாங்கவுள்ளனர்.

இப்பேச்சுவார்த்தைகள் மற்றும் கூட்டங்களின் போது இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்த மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட இருப்பதுடன், அரசியல், வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, சுற்றுலா, விவசாயம், கல்வி, உள்ளிட்ட பல்வேறு துறைசார்ந்த அக்கறைக் குரிய விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்படவுள்ளது. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** பெரிய தம்பனை, புளியடிமுறிப்பு, வேலங்குளம், மகாறம்பைக் குளம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## பளை முல்லையடியில் விபத்து வாகன சாரதி மறியல்

(பளை)

பளை முல்லையடி பகுதியில் கடந்த 5ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தில் 13 வயதுடைய பாடசாலை மாணவன்ஒருவர் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய கப்ரக வாகன சாரதியை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

துவிச்சக்கர வண்டியில் வீதியை கடப்பதற்காக காத்திருந்த சிறுவனை வேகமாக வந்த கப்ரக வாகனம் மோதி தள்ளி விபத்து ஏற்பட்டிருந்தது. சாரதி விபத்து நடந்த இடத்திலிருந்து தப்பிச்சென்ற நிலையில் பளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ஆரம்பகட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட தன் பின் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி சுபராஜினி முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்ட வேளை சந் தேகநபரை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக் கமறியலில் வைக்குமாறு மன்று கட்டளையிட்டது. (ம-7)

## யானை தாக்கியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விவேகானந்தபுரம் பகுதியில் யானை தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விவேகானந்தபுரம் - ஆயிரம்கால் மண்டபம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் தும்பங்கேணி - சுரவணையடி ஊற்று கிராமத்தைச் சேர்ந்த 59 வயதுடைய நாகமணி நாராயணபிள்ளை என்ற 4 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று காலை அப்பகுதிக்கு சென்றவர்கள் குறித்த பகுதியில் சைக்கிள் மற்றும் சடலத்தினை கண்டு பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் அப்பகுதிக்கு சென்ற வெல்லாவெளி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ.எம்.பி அலுவலக செயற்பாடுகளுக்கு எதிராக உறவுகள் போராட்டம்

(கிளிநொச்சி)

**கிளிநொச்சியில் ஓ.எம்.பி அலுவலக பதிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



ஓ.எம்.பி அலுவலகத்தால் மேற்கொள்ளப்படும்பதிவுக்கு எதிர்ப்பு தெரிவித்தே நேற்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் அலுவலகத்தினால் அழைக்கப்பட்டவர்களிற்கான பதிவுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

குறித்த அலுவலக் செயற்பாட்டிற்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பெற்றோர்கள் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் காணாமல் ஆக்கப்பட்டோரின் அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்துரையாடிய போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது ஆதங்கத்தினை வெளியிட்டனர். அத்துடன் அலுவலகத்தால் பதிவுகளுக்காக வழங்கப்பட்ட அழைப்பு கடிதங்களையும் தீயிட்டு எரித்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் 15 ஆண்டுகள் கடந்தும் தமது உறவுகள் குறித்து இலங்கை அரசோ அல்லது அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட இந்த ஓ.எம்.பி அலுவலகத்தின் மூலமோ எப்போதும் நீதி கிடைக்காது. குறித்த அலுவலகத்தின் செயற்பாட்டை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம் எனத் தெரிவித்தனர். (4-6-100-315)



யாழ். வண்ணை ஸ்ரீவீரமாகாளி ஆலய தொண்டர் சபையின் நிதிப் பங்களிப்பில் ஆலயச் சூழலிற்கு அருகில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் பொருளாதாரத்தில் நலிவடைந்த 100 மாணவர்களுக்குகடந்த வியாழக்கிழமை வைரவர் சாந்தி உற்சவத்தினை முன்னிட்டு தலா 4000 ரூபா மதிப்புள்ள கற்றல் உபகரணங்களை கொள்முதல் செய்வதற்கான காசோலைகள் வழங்கப்பட்டன. (படம்- சிவசாந்தன். கஜிந்தன்)



யாழ்ப்பாணம்-கைதடி சித்த போதனா மருத்துவமனையின் 50 ஆவது வருட நிறைவை முன்னிட்டு பொன்விழா நிகழ்வுகள் அண்மையில் மருத்துவமனையில் இடம்பெற்றன.

இதன் போது மூலிகைத் தோட்டம் திறந்து வைக்கப்பட்டதோடு அங்கு புதிய மூலிகைச் செடிகளும் நாட்டப்பட்டன. அத்துடன் இந் நிகழ்வில் "சித்தத்தின் பொற்குகை" என்ற பொன்விழா நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. (படம்-சுபேசன்)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 20 ஆவது இரத்தான முகாம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிமுதல் மாலை 2 மணிவரை இளவாலை பிரதேச மருத்துவமனையில் இடம்பெறவுள்ளது.

இக்குருதிக்கொடை முகாமில் குருதிக்கொடையாளர்கள் அனைவரையும் பங்குகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (4-6)

# பெரிய விளாத்திக்குள வீதி விவகாரம் கள ஆய்வை மேற்கொண்ட நீதிவான்

(குருமன்காடு)

வவுனியா பெரிய விளாத்திக்குளம் பிரதான வீதியை தமது பாவனைக்கு வழங்க வேண்டும் என கிராம மக்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்த நிலையில் குறித்த வீதியை வவுனியா நீதிவான் நீதிமன்ற நீதிபதி நேற்று முன்தினம் பார்வையிட்டிருந்தார்.

வவுனியா பெரிய விளாத்திக்குளம் பிரதான வீதி ஓமந்தை புகையிரத நிலையம் அமைப்பதற்காக 2012 ஆம் ஆண்டளவில் நிரந்தரமாக மூடப்பட்டு மக்கள் பாவனைக்காக பிறிதொரு பாதை வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தமது பழைய பாதையை மீள வழங்க வேண்டும் எனக் கோரி கிராம மக்கள் போராட்டங்களை நடத்தியிருந்தனர்.

அத்தோடு 2018 ஆம் ஆண்டு ஓமந்தை பொலிஸார் ஊடாக கிராம மக்கள் வழக்குத் தாக்கல் செய்திருந்த நிலையில் கடந்த வழக்கு விசாரணையின் போது நீதிவான் நீதிபதி குறித்த இடத்தை பார்வையிட வருவதாக தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மதியம் ஓமந்தை புகையிரத நிலையப் பகுதிக்கு வருகை தந்த நீதிபதி மூடப்பட்ட பாதை மற்றும் தற்போதைய பாதைகளை பார்வையிட்டதுடன் புகையிரத திணைக்கள பொறியியலாளர் மற்றும் கிராம மக்கள் சார்பிலான சட்டத்தரணி ஜனாதிபதி சட்டத்தரணி எம் ஏ. சுமந்திரன். கிராம மக்களுடன் கலந்துரையாடிய நீதிபதி மக்களின் இலகுவான பயணத்திற்கு ஏதுவாக எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் புகையிரத திணைக்களத்தினரிடம் கேட்டறிந்தார்.

இதனையடுத்து இரண்டு வாரங்களில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிபதி புகையிரத திணைக்களத்தினருக்கு தெரிவித்துள்ளதுடன் குறித்த பாதை விவகாரம் தீர்வை எட்டியுள்ளதுடன் அடுத்த வழக்கு விசாரணை எதிர்வரும் 21 திகதி இடம்பெறவுள்ளது. (4-6-250)

# வாய்க்கால் மூடப்பட்டுள்ளமையை எதிர்த்து மக்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆரியகுளத்திற்கு வரும் வாய்க்கால் ஒன்று மூடப்பட்டுள்ளதன் காரணமாக தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து ஆரிய குளம் மூன்றாம் ஒழுங்கை மக்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வாய்க்கால் மூடப்பட்டுள்ளதால் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாக தெரிவித்து குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த பகுதியில் நீர் தேங்கி நிற்பதால் டெங்கு நோய்தாக்கம் துர்நாற்றம் வீசுவதால் பல இன்னல்களை எதிர்நோக்குவதாக தெரிவித்தனர்.

மேலும் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய தீர்வினை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்தனர். (4)

# செவிலியர் இளவாலை அமுது நூல் வெளியீடு இன்று

(யாழ்ப்பாணம்)

புலம்பெயர் எழுத்தாளர் சிவ. தணிகலாசலத்தின் "செவிலியர் இளவாலை அமுது" நூல் வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு இணுவில் பொதுநூலக தகவல் தொழில்நுட்ப விரிவுரை மண்டபத்தில் மேனாள் பேராசிரியர் தேவராஜா தலைமையில் இடம் பெறும். (4-6)

# மன்னார் கடற்கரையில் கரைதட்டிய இந்தியக் கப்பல்



(மன்னார்)

இந்தியாவிற்குச் சொந்தமானது என கருதப்படும் கப்பல் ஒன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை மன்னார் நடுக்குடா கடல் பகுதியில் கரைதட்டி உள்ளது.

தலைமன்னார் கடற்பரப்பு ஊடாக கரைதட்டிய கப்பலை கடற்படையினர் மீட்டு நடுக்குடா கடற்கரை பகுதிக்கு கொண்டு வந்துள்ளனர்.

குறித்த கப்பல் கடற்பகுதியில் காணப்படும் மணல்களை அகழ்வதற்காக பயன்படும் கப்பலின் தோற்றத்தை ஒத்ததாக காணப்படுகின்றது. கப்பலில்ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக கப்பல் கடற்பகுதியில் கரை தட்டி இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்ற நிலையில் பொது மக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர். (4-6-285)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 320 | 350 | 200 | 300 |
| உருளைக்கிழங்கு | 220 | 240 | 210 | 240 |
| பச்சைமிளகாய் | 700 | 800 | 650 | 700 |
| தக்காளி | 450 | 350 | 400 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 220 | 200 | 250 |
| கோவா | 350 | 260 | 300 | 320 |
| கரட் | 360 | 500 | 500 | 550 |
| பூசணி | 140 | 100 | 100 | 150 |
| புடோல் | 180 | 160 | 180 | 250 |
| வாழைக்காய் | 180 | 180 | 100 | 160 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 | 130 | 160 |
| பாகற்காய் | 600 | 500 | 400 | 800 |
| வெண்டக்காய் | 250 | 260 | 120 | 400 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 200 | 280 |
| பயற்றங்காய் | 450 | 400 | 300 | 350 |
| லீக்ஸ் | 320 | 280 | 300 | 300 |
| பீற்றூட் | 350 | 350 | 350 | 450 |
| கறிமிளகாய் | 350 | 350 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 800 | 500 | 400 | 600 |
| போஞ்சி | 550 | 450 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 300 | 260 | 240 | 280 |
| கீரை - 1 பிடி | 100 | 60 | 80 | 100 |
| தேசிக்காய் | 200 | 200 | 300 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 260 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 350 | 400 | 400 | 600 |
| முள்ளங்கி | 180 | 140 | 180 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 35 | 50 | 60 |
| ஈரப்பலா | 150 | 200 | — | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்டோ மோதி...

அவர் ஆலயத்தில் இருந்து மீண்டும் வீடு திரும்பி கொண்டு இருந்தபோது தம்பசிட்டி, கப்பல் கொம்பனிக்கு அருகாமையில் முச்சக்கரவண்டி மோதியுள்ளது.

இதில் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## மீசாலையில்...

வரே உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணத்திலிருந்து மீசாலையில் உள்ள உறவினர் ஒருவரது வீட்டிற்கு செல்வதற்காக பேருந்தில் வந்திறங்கிய குறித்த முதியவர் வீதியை கடக்க முற்பட்டபோது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் காயமடைந்துள்ளார்.

விபத்தையடுத்து மீசாலை சந்தியில் நின்ற முச்சக்கரவண்டி சாரதிகள் காயமடைந்த முதியவரை மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

எனினும் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார். (ம-7,104)


தன நிதானய
திகதி - 2023.07.08
சீட்டிழுப்பு இலக்கம் - 1199
G 26 49 69 71 G
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விசேட ஆங்கில எழுத்து
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416
NATIONAL LOTTERIES BOARD

கொவிசெத
திகதி 2023.07.08
சீட்டிழுப்பு இலக்கம் 3411
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 26 47 76 79
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 08/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1517
வெற்றி எழுத்து J
சுப்பர் இலக்க 25
வெற்றி இலக்கங்கள் 25 26 28 52

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.07.08
சீட்டிழுப்பு இலக்கம் 478
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 04 06 22 30
துலாம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/07/08
சீட்டிழுப்பு இலக்கம் 5169
ஆங்கில எழுத்து T
வெல்லப்பட்ட இலக்கங்கள் 4 4 4 4 0 0
தேசிய லொத்தர் சபை


## இறக்குமதி...

பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நுகர்வோர் அத்தியாவசிய பொருட்களை தட்டுப்பாடு இன்றி பெறுவதற்கு தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும், இறக்குமதி கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டுள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

"முந்தைய சூழ்நிலை மற்றும் தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொள்ளும்போது, தற்போது அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை. மேலும், எரிபொருள் மற்றும் எரிவாயு விலையும் இப்போது குறைந்து வருகிறது. அரசாங்கம் இப்போது பல இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ள நிலையில் எதிர்காலத்தில் மேலும் இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்த செயற்பட்டு வருகிறது என்றார். (ம-7)

## இலங்கைக்கு...

பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த இலங்கைப் பிரதி இந்திய உயர்ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப் இதனைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்திற்கு இலங்கை சார்பில்நிதி உத்தரவாதத்தை வழங்கிய முதலாவது கடன் வழங்குநராக இந்தியா செயற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில், கடல்சார் பாதுகாப்புத் துறையில் பொதுவான சவால்களை எதிர்கொள்வதற்கு இரு நாடுகளும் கவனம் செலுத்தும் எனவும் இலங்கைக்கான பிரதி இந்திய உயர்ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## பொருளாதார...

மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசாங்கத்தின் "நவீன நாணயக்கொள்கையின்" விளைவாக நாடு முகங்கொடுக்கவிருக்கும் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை மூன்று வருடங்களுக்கு முன்னரே தான் கணித்ததாகவும், மத்திய வங்கியின் அப்போதைய நடவடிக்கைகளின் ஆபத்தான தன்மை குறித்து தான் எச்சரித்ததுடன் அதன் விளைவாக 2021 செப்ரெம்பரில் முன்கூட்டியே ஓய்வு பெறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே ஆளுநர் நந்தலால் வீரசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அக்காலப்பகுதியில் நாணயக் கொள்கை குழுவின் தலைவர் என்ற ரீதியிலும், சிரேஷ்ட பிரதி ஆளுநர் என்ற வகையிலும் நான் எப்போதும் கரிசனைகளை வெளிப்படுத்தியிருக்கின்றேன். இருப்பினும் மத்திய வங்கி உத்தியோகத்தர்களான நாம், நிர்வாகத்துடனும் கொள்கை ரீதியில் அரசாங்கத்துடனும் எமக்கிருந்த உள்ளகக் கருத்து வேறுபாடுகள் தொடர்பில் பகிரங்கமாக எதனையும் வெளிப்படுத்தவில்லை" என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் "நான் மாத்திரமன்றி மத்திய வங்கியின் ஏனைய உத்தியோகத்தர்களும் தமது கரிசனைகளை வெளிப்படுத்தினார்கள். நான் வெளியேறிய பின்னரும்கூட அவர்கள் கரிசனைகளை முன்வைத்தார்கள். இருப்பினும் அவற்றை யாரும் செவிமடுக்கவில்லை. ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக அப்போதைய சூழ்நிலையில் மத்திய வங்கியின் உயர் மட்டத்திலிருந்தும், வெளியிலிருந்தும் மாற்று சிந்தனைகள் முன்வைக்கப்பட்டன.

குறிப்பாக அப்போது மத்திய வங்கியினால் 6 மாதகாலத்துக்கான பொருளாதார செயற்திட்டம் வெளியிடப்பட்டது. இருப்பினும் முற்றுமுழுதாக சாத்தியமற்றதும், பொய்யானதுமான எதிர்வுகூறல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அச்செயற்றிட்டம் ஏப்ரல் மாத இறுதியில் எவ்வித பலனையும் தராமல் முடிவுக்கு வந்தது" என்றும் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

## உறவுகளின்...

காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டத்தில் நெகிழ்ச்சியான சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தால் (OMP) மேற்கொள்ளப்படும் பதிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றுக் காலை கிளிநொச்சி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் குறித்த போராட்டத்தில் திடீரென சுகவீனமுற்ற தாயாருக்கு பெண் பொலிஸ் உத்தியோகத்தர் நீர் பருக்கிய சம்பவம் அங்கிருந்தவர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

உதவிபொலிஸ் பரிசோதகரான பெண் உத்தியோகத்தரே போராட்டத்தில் சுகவீனமுற்ற குறித்த தாயாருக்கு குடிநீர் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சமூக...

குவதுமற்றும்பாலியல் தொல்லை கொடுக்கும் வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வெளியாகியுள்ளது.

நவகமுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மேல் போமிரிய பிரதேசத்தில் அமைந்துள்ள விகாரையொன்றில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் விளக்கமளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தண்டனைச் சட்டத்தில் இது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருவர் இதுபோன்ற பிரசாரத்தை செய்தால், 2 ஆண்டுகள் வரை கடூழிய அல்லது இல்லாமல் தண்டிக்கப்பட வாய்ப்பு உள்ளது. அபராதம் விதிக்கவும் சாத்தியமும் உள்ளது என்றார். (ம-7)


வீடு வாடகைக்கு
வெள்ளவத்தையில் 42ஆவது லேன், No.3ம் இலக்கத்தில் இரண்டு அறை, இரண்டு குளியலறை குசுனியுடன் கூடிய அடுக்குமாடி வீடு நாள், கிழமை, மாத வாடகைக்கு உண்டு. (16242)
T.P:- 075 278 6033

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2143
வர்ணம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.07.08
தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 20 46 57 66
ஆங்கில எழுத்து P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,939,212.40
சுப்பர் போல் "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 22 35 48 61 Q
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
DLB

சனிதா
திகதி 2023.07.08
வெற்றி வாரம் 4304
வர்ணம் இளம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 12 19 41 44
ஆங்கில எழுத்து E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,328,812.00
சனிதா "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 22 46 50 60 P
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
DLB

ராசி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் 3855
வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.07.08
தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 20 32 36 57
கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,000,000/-
ராசி அதிர்ஷ்டம் "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 35 53 54 62
சிம்மம்
DLB

கப்ருக
திகதி 08.07.2023
வெற்றி வாரம் 1319
வர்ணம் சிவப்ப
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 23 04 08 56 71
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 414,435,214.20
கப்ருக "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 07 18 21 72 Q
DLB தொலை பேசி 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 609
திகதி 2023-07-08
வர்ணம் ஆரஞ்சு நிறம்
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 01 27 61
விதி எண் 09
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 21,584,992.00
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

අද කෝටිපති
அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 1969
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2023.07.08
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,882,054/-
வெற்றி இலக்கங்கள் 36 38 52 59
ஆங்கில எழுத்து K
அத கோடிபதி "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 12 15 22 26 J
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு

யாழ். நகரில் இயங்கும் ஹோட்டல் ஒன்றிற்கு தகைமை அல்லது விருப்பம் உடையவர்கள் தேவை.

- சமையலாளர்
- சமையல் உதவியாளர்

ஆண், பெண் இருபாலாரும் இன்றே அழையுங்கள். (16239)

**077 817 7817**

## கணினி தட்டெழுத்தாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு கணினி தட்டெழுத்தாளர் தேவை.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்

**076 573 4507** (16209)

## Free Spoken English with Computer Application

ஏதாவது கற்கை நெறியை கற்போருக்கு

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

- Diploma in Aari Work
- Diploma in Computer Hardware
- Diploma in Television Media and Mass Communication

UASL.UK இன் ISO Certificate (16219)

அனைத்து கற்கை நெறிகளும் பூரண செயன்முறை பயிற்சிகளுடன் வழங்கப்படும்

**Victory**
No.100,2nd Floor,
Manipay Road,Jaffna
(Jaffna Town Area)

**077 028 8711**

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, ஹட்டன், கண்டி ஆகிய மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படவுள்ள எமது W.E.C நிறுவனத்தின் கிளைகளுக்கு முன்னனுபவம் உள்ள மற்றும் முன்னனுபவம் அற்ற நபர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

2023 O/L பரீட்சை எழுதியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**எமது நிறுவனத்தால் கிடைக்கக்கூடிய சலுகைகள்**

- பயிற்சியின் போது மாதம் 24500/= தொடக்கம் 36000/= வரை
- தங்குமிட வசதி இலவசம்.
- பயிற்சியின் பின் உங்கள் பிரதேசத்தில் வேலைவாய்ப்பு
- நாள் மற்றும் மாத ஊக்குவிப்பு தொகை வழங்கப்படும். (16248)
  - வெளிநாட்டு சுற்றுலாப்பயணம்
  - Smart Phones
  - Cash Bonus
  - Ring(Gold)

**தகைமை**
A/L,O/L தரம் 10 படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்

**077 985 8580**
**077 517 9034**

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம்.கேட்டை வயது 37, கிரக பாவம் 20, அஞ்சல் பட்டுவாடா (AL)மணமகனுக்கு மணமகள் தேவை (16221)

**070 606 8453**

## பணியாளர் தேவை

வரவேற்பாளர் (Receptionist)

கணக்காளர் (Accountant)

அலுவலக பராமரிப்பாளர்

வேலை தேடும் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை (16233)

**மூர்த்தி டிஜிட்டல்**
62/20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**077 224 7428**

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு **076 636 3378 076 097 3127**

## Agro Ventures

PLANTATIONS (PVT) LTD

எமது யாழ்ப்பாணக் கிளைக்கு

- கிளை முகாமையாளர்
- விற்பனை முகாமையாளர்
- விற்பனைப் பிரதிநிதிகள் (ஆண்/பெண் இருபாலரும் தேவை)

☞ கவர்ச்சிகரமான சம்பளம், வாகன செலவு வழங்கப்படும்
☞ ஆயுட்காப்புறுதி, விற்பனைத்துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை

(16203) **077 716 3471**

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி சந்தையில் இருந்து தனங்களப்பு வீதியில் 100 மீற்றர் தூரத்தில் பிரதான வீதியுடன் 150 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு (16183)

**077 348 1379,077 113 1452**

## மணமகள் தேவை

அந்தணர் குலம், வயது 31, ரேவதி நட்சத்திரம், செவ்வாய் தோசமில்லை, பூசகர், பாற் பண்ணை உரிமையாளர் மணமகனுக்கு மணமகள் தேவை. (16230)

**021 223 1946**

## IELTS - New Batch ஆரம்பம்

Sp.Offer 10% Discount
உடன் Basic & Advance Grammar Classes, First Class (Free of Charge)
இல. 53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:- B.MURALI (16215)

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக் கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

## வேலை வாய்ப்பு

இலங்கையின் முன்னனி நிறுவனத்தில் புதிதாக ஆரம்பிக் கப்பட்ட யாழ்ப்பாண கிளையில் வேலைவாய்ப்பு. உங்கள் சுய விபரக்கோவையை (CV) Whatsapp செய்யவும். (16200)

**077 874 7451**
**077 865 1993**

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை இனி வரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/= (16033)

**T.P:077 544 8503**

## A/L Online Classes

**English Medium**
- Biology
- Chemistry

(16202)

**077 807 5566**

## தேவை

☞ Receptionist
☞ Career Guidance Counsellor (Education)

தகுதி வாய்ந்தவர்கள் தங்கள் சுயவிபர கோவையுடன் பின்வரும் Whatsapp மூலம் விண்ணப்பிக்கலாம்.

யாழ்/ தாவடி பிரதேசத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது (16231)

**070 686 7695**
**076 897 6665**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

☞ பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
☞ புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
☞ மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
☞ வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
☞ சுன்னாகம் - சாவகச்சேரி அரச தனியார் பேரூந்துகள் செல்லும் வீதி
☞ பிரதான காபற் வீதி முகப்புடன் மூன்று இலட்சம் ரூபாய் 300,000/= பின் துண்டு காணிகள் ஒரு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் 150,000/=
☞ பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
☞ நன்னீர் ஊற்று.

(16217)

**076 826 0354**
**076 057 0354**

## காணி விற்பனைக்கு

A9 வீதி (கண்டி வீதி)யை முகப்பாகக் கொண்டு கைதடி சித்த மருத்துவ வளாகத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள 'காளியாவத்தை' என்னும் நி.பர 33 1/4 விஸ்தீரண ஆதனம் விற்பனைக்குண்டு. (16221)

பரப்பு ஒன்று முப்பது இலட்சம்

**077 303 1158**

## வீட்டு உதவியாளர் தேவை

வீட்டு உதவிகள் செய்யக் கூடிய மற்றும் நான்கு வயது குழந்தையை பார்க்கக் கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை. (16232)

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
இடம் : சாவகச்சேரி

**077 700 2552**

## பற்சிகிச்சை

நிரந்தர பல்கட்டுதல் (implant), கிளிப் போடுதல் மற்றும் அனைத்து நவீன சிகிச்சைகளும்

**கம்சியா**
பற்சிகிச்சைப் பிரிவில்
(யாழ்.ஆஸ்பத்திரிக்கு முன்பாக, BOC வங்கிக்கு அருகில்) நடைபெறுகிறது. (C-6883)
578/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**077 375 4490**
**077 220 2769**

## விற்பனைக்குண்டு

❶ பொக்ஸ் செகண்ட் கார்
❷ 09 Kw ஜெனரேட்டர்
ஆகியன விற்பனைக்கு உண்டு (16240)

**077 773 0567**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.